711

பண்டைக்காலத் தமிழ் இசையும், தற்காலம் வழங்கும் இசையும்.

இஃது

பண்டைத் தமிழ் இசை வித்வான்

சங்கீதபூஷணம்

பு. உ. கே. நடராஜ பிள்ளை அவர்களால்

இயற்றப்பெற்று

கோவை, உயர்திருவாளர்

ஆர். ஆர். இராமசுவாமி நாயுடு (B. A., B. L.)

அவர்களின் பொருளுதவியால்

கோவை, பீளமேடு,

ஆர். கே. ஐ. அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது.

நற்சாட்சித் தாள்கள்

சிதம்பரம் நகராட்சி அகில இந்திய சுதேசி கைத்தொழிற் கலைப் பொருட்காட்சி

1947-ஷு நற்சாட்சித்தாள்

கோயமுத்தூர்,
பண்டைத் தமிழிசை வித்வான்,
பி. ஓ. கே. நடராஜபிள்ளை அவர்கள்
சுய முயற்சியால் தயாரித்த
தமிழிசைக் கருவி சகோடயாழுக்கு வழங்கப்பட்ட நற்சாட்சித்தாள்

ச. வெ. சோமசுந்தரம் — பி. ஷெட்டி
செயலாளர். — தலைவர்.

தேதி 2—7—47

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

42-வது சைவ மகாநாடு, கோவை

கோவை கலை இயல் கண் காட்சி

1947
25, 26, 27 டிசம்பர்

நற்சாட்சித்தாள்

திரு பி. ஓ. கே நடராஜ பிள்ளை — அவர்கள் பண்டைத் தமிழ் இசைக்கருவிபற்றி ஒருபடி கண்காட்சியில் வைத்தார்கள். நீதிபதிகள் தேர்ச்சியிலே சகோடயாழை சீரியதாக கருதுகிறார்கள்.

சி. எம். ராமச்சந்திரஞ் செட்டியார் — கந்தசாமி
செயலாள்ர் — தலைவர்

கோவை 27—12—47

THE TAGORE ACADAMY

TESTIMONIAL

R. S. Puram, Coimbatore,
6—1—46

As a member of Poet Rabendranath tagore's travelling party in 1922, I was present when poet Lakshmana Pillai's pupil played the Gurus tamil songs on Gote Vadyam at the State Guest House, Trivandram. Himself a famous musician and world pilgrim Tagore appreciated that musical instrument as "THE NEAREST APPROCH TO THE HUMAN VOICE."

Now, it is my pleasant duty to state that the latest musical instrument invented by Sangita Booshanam B. O. K Nataraja Pillai (after the model of Sagoda Yazh mentioned in the ancient tamil classic silappadikaram) excels Gote Vadyam by a marvellous tonal effect. Veenai has Seven String, Gote Vadyam 11 and this modern Yazh has 14 strings as of old.

As a pioneer in this field of musical reserch, Sri Nataraja Pillai deserves encourgement and support.

I wish him all success in India and abroad.

(Sd.) N. LAKSHMANAN,
Founder - Secretary.

HEAD OF THE DEPARTMENT OF INDIAN MUSIC-MADRAS UNIVERSITY, MADRAS.

TESTIMONIAL.

I had the pleasure of listening to the newly devised Stringed instrument of Mr. B. O. K. Natraja Pillai. The instrument is modeled on some of the principles of the ancient Sagoda Yazh and has 14 strings,

In the technique of play, it resembles the Gottu Vadyam. The instrument has a very good tone and can be used for playing high class music.

Head of the Department of Indian Music Madras University. (Sd.) P. SAMBAMOORTHY,

3-rd Feb. 47.

I hvae heard Sri B. O. K. Natarajan Pillai play on a new instrument called 'Sagoda Yazh.' Those who were present with me agree that the instrument has an excellent tone pleasing to the ears and in certain respects it can claim to be superior to the populor Veena. He deserves every support and encouragement that could be extended to him in advertising and popularsing his instrument.

Coimbatore,
6th October 1947.

(Sd.) KOMAN, I. C. S.
Dist. Judge.

பதிப்புரை

தேனினுமினிய தெய்வத்தமிழ்மொழியை தமிழ் மக்கள் இயல், இசை, நாடகம் என மூவகையாகப்படுத்தி, அதில் இசையை நடுநாயகமாக வைத்துப் பல்லாயிர ஆண்டுகளாகப் போற்றி வளர்த்தார்கள். தமிழ் இலக்கியத்தில், பொதுவாக எல்லாக் கலைகளும் வளம்பெற்று வளர்ந்திருந்தாலும், இசைக்கலை சிறப்பாக தனி இடம் பெற்றிருக்கிறது. இசைக்குச்சம்பந்தப்பட்ட பழங்கருவிகளான தண்ணுமை, குழல், யாழ் முதலியவைகளில் யாழ் எனப்படும் நரம்புக் கருவியானது, சிலப்பதிகாரம் எழுதப் பட்ட காலத்தில் பலவிதமாக செய்யப்பட்டு 9முதல் 1000 நரம்புகள்வரை கொண்டு பலபெயர்களுடன் இசை வாணர்களிடம் வழங்கி வந்தது. அவைகளில் 21 நரம்புகளை உடைய பேரியாழ் 19 நரம்புகளை உடைய மகரயாழ் 14 நரம்புகளை உடையன் சகோடயாழ் 7 நரம்புகளை உடைய செங் கோட்டியாழ் பெரும்பாலாக இசைவாணர்கள் உபயோகித்து வந்ததாகத்தெரிகிறது. காலப்போக்கில், எக்காரணத்தாலோ இந்த இசைக்கருவிகள் வழக்கில் இல்லாமல் மறைந்து விட்டன. அவைகளுடன் பழந்தமிழரின் இசையும் மறைந்தது. சிலபழந்தமிழ் நூல்களில் மட்டும் இப்பொழுதும் அவற்றை பற்றிய சில குறிப்புகளைக் காணலாம். 7நரம்புகளை உடைய செங்கோட்டியாழ்க்குச்சமமாக தற்காலம் உபயோகிக்கப்படும் வீணையைச்குறிப்பிடலாம்.

என் நண்பர் இசைவாணர் பு. உ. கே. நடராஜபிள்ளை அவர்கள் அண்ணாமலைப் பல் கலைக்கழகத்தில் இசை தேர்ச்சிபெற்றவர். தமிழிலும், தமிழிசையிலும் மிகுந்த ஆர்வமுடையவர். அவர் தமிழிசை ஆராய்ச்சியில் ஈடுபட்டுப் பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்த தின்பயனும் தமிழ்மக்களாகிய நமக்கு சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் மறைந்து போன சகோடயாழ் எனும் இசைக்கருவி கிடைத்தது. பிள்ளை அவர்கள், அமராவதிக் கல்லோவியத்தைத்தழுவியும் சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுக்காதையில் காணும்சில குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டும், பழந்தமிழ் நூல்களில் சொல்லப்பட்ட தணக்கு (மலைவேம்பு) என்னும் ஓர் வகை செம்மரத்தால் அழகிய வடிவில் சகோட யாழைச் செய்திருக்கிறார். இந்த யாழில் சில ராகங்களையும் பாட்டுக்களையும் பிள்ளை அவர்கள் வாசித்ததைக் கேட்டேன். இனிமையாக இருந்தது. சங்க காலத்தில் பாட்டுக்களையும், ராகங்களையும் வாசிப்பதற்கேற்ற கருவி. இந்த கருவியில் உபயோகிக்கத் தகுந்த நரம்புகள் கிடைக்காததால் கம்பிகளை உபயோகித்திருக்கிறார். ஆதலால் அதிக் கார்வை கொடுத்த வாசிக்க முடிந்தாலும் நாதம் மிகவும் மெல்லியதாயிருக்கிறது. பொருத்தமான நரம்புகளை உபயோகப்படுத்தி வாசித்தால் மிகவும் இனிமையான நாதம் உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை.

பொது மக்கள் எந்த இசைக் கருவிகளை வாசித்துக் கேட்க அதிகமாக விரும்புகிறார்களோ, அந்தக் கருவிகளின் வாசிப்பை அனுசரித்தே பாடும் வழியும் இருக்கும்

என்பது அனுபவத்தில் தெரிந்த உண்மை. பண்டைக்கால இசைக் கருவிகள் ஒவ்வொன்றாய் மறைந்த சமயம் பண்டைக்காலத்தில் வழக்கத்திலிருந்த பண்களும் பண்கள் பாடும் முறையும் மறைந்தன. பின்னை அவர்கள் பொதுமக்களுடைய ஆதரவும், பாராட்டுதலுக்கும் பாத்தியப்பட்டவர், அவர் இசைக்கருவிகளின் ஆராய்ச்சியில் கண்ட வெற்றியானது அவரைப்போல் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் இதர இசைவாணர்களுக்கு ஒரு தூண்டுகோலாயிருந்து அவர்கள் ஆயிரம ஆண்டுகளுக்கு முன் மறைந்த மற்ற இசைக்கருவிகளுக்கு மறைந்த பண்களுக்கும் புத்துயிர் கொடுத்து மக்கள் மத்தியில் இன்னிசைமுழங்கி இன்பமூட்டுவார்களென்று நம்புகிறேன்.

குறிப்பாக குறிஞ்சியாழ்(தற்காலம் ஹரிகாம்போதி எனப்படும் ராகம்)என்பதை விஸ்தாரமாக வாசித்துக்காட்டினார்: நாதநாமக் கிரியை மந்தரஸ்தாயில் வாசித்தது உள்ளத்தை உருக்கும் வகையாக அமைந்தது.

இங்ஙனம்

R. R இராமசாமி நாயுடு B. A. B. L.

முகவுரை

By திருமந்திரமணி - நுடிசைகிழார்
அ. சிதம்பரனுர் M. T. A. S - M. T. S. M-S. S.c

"பண்டைக்காலத் தமிழர் இசை" என்ற நூலை நான் படித்துப் பார்த்தேன். அதனை எழுதியவர் எனது நண்பர். கோவைப் பண்டைத் தமிழிசை வித்வான் சங்கீத பூஷணம் B. O K. நடராஜபிள்ளை ஆவர்.

கி. பி. 567 முதல் கி. பி. 648 வரை 81 ஆண்டுகள் வாழ்ந்த அப்பர் சுவாமிகளும், கி. பி. 634 முதல் கி பி. 650 வரை வாழ்ந்த திருஞானசம்பந்தசுவாமிகளும் கி.பி. 694 முதல் கி.பி.712 வரை வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பண்டைத் தமிழ் பண்களுடன் பாடிய தேவாரப் பதிகங்கள், அவர்கள் காலத்துக்கு அப்புறம் பிற மதங்களின் மேலீட்டால் வழக்கு வீழ்ந்து அழிந்தன சிதம்பரத்தில் உள்ளவர்கள் தங்களிடம் இருந்த தேவாரச் சுவடிகளை எல்லாம் தில்லை நடராஜர் கோவிலின் உட்பிரகாரத்தில் வடமேற்கு மூலையில் உள்ள ஒரு அறையிற்போட்டு அவ்வறையை மூடிவிட்டார்கள். மற்ற இடங்களில் மற்ற பேர்களிடம் இருந்த சுவடிகள் எல்லாம் கறையானுக்கும் நெருப்புக்கும், ஆற்று வெள்ளத்துக்கும் இரையாயின

சோழ அரசன் இரண்டாம் பராந்தகன் கி பி 965-ல் உறையூரில் பெய்த மண்மாரியினுல் இறந்துபடவே அவன் மகன் இரண்டாம் ஆதித்தன் என்கிற அபயகுலசேகர சோழன் என்கிற இரண்டாம் கரிகாலன் கி பி. 966 ல் பட்டத்துக்கு வந்தான். பட்டத்துக்கு வந்ததும் அரச இருக்கையாகிய உறையூர் மண்மாரியால் அழிந்து போகவே, அரசஇருக்கையை திருவாரூருக்கு மாற்றிக்கொண்டான். திருவாரூரில் இருந்து இவன் சோழநாட்டை ஆண்டுவந்த பொழுது, இவனுடைய அவைக்கு வரும் சைவப்புலவர்களும், பெரியார்களும தேவாரப்பாசுரங்களை பண்முறையோடு ஓதி அரசனை ஆசீர்வதிப்பார்கள். அதனைக்கேட்டு அரசன் தேவாரச்சுவடிகளை தேட ஆரம்பித்தான். எங்கும் கிடைக்காமல் மனக்கவலைப்பட்டுக் கொண்டிருந்தான் ஒரு சமயம் தில்லை நடராஜப் பெருமானைத் தரிசித்து விட்டுத் திருநாரையூர்த் தரிசனத்துக்காகச் சென்றிருந்தபோது, அவ்வூரில் கோவில் பூசை செய்யும் நம்பியாண்டார் நம்பிகளால் தேவாரச் சுவடிகள் எல்லாம் சிதம்பரத்தில் உட்பிரகாரத்தில் வடமேற்கு மூலையில் ஒரு அறையில் போட்டு மூடப்பட்டுள்ளது என்று தெரிந்து உவகையுடன் அந்த நம்பிகளையும் இட்டுக்கொண்டு சிதம்பரம் வந்து, நடராஜப்பெருமானுக்கும் சமயாசாரிகள் மூவருக்கும் அபிஷேக ஆராதனைகளைச் செய்து சமயாசாரி

களை எழுந்தருளச்செய்து கொண்டு, குறிப்பிட்ட அறையண்டை போய்திறந்து பார்க்க, சுவடிகளில் செல் அரித்தது போக சிறுபான்மை கிடைத்தன. அப்படிக் கிடைத்த பதிகங்கள்மொத்தம் 796. அப் பதிகங்களைத் திருமுறையாக வகுத்தருளும்படி அரசன் நம்பியாண்டார் நம்பிகளைக் கேட்டுக்கொள்ள, நம்பிகளும் அப்படியே திருஞான சம்பந்தசுவாமிகள் பாடியவற்றை மூதல் மூன்று திருமுறைகளாகவும், அப்பர்சுவாமிகள் பாடியவற்றை நன்கு-ஐந்து-ஆறுவது திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்திகள் பாடியவற்றை ஏழாவது திருமுறையாகவும் வகுத்தார்.

வகுத்தபின் அவைகளை நோக்க தேவார பதிகங்களுக்குப் பண்கள் இன்னின்ன என்று குறிப்பிடப்பட்டிருக்க, அப் பண்களின் அடைவு இன்னதென்று பாடிக்காட்ட யாரும் இல்லாமையாலே அரசனும் நம்பிகளும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் போது, திருநீலகண்டயாழ்ப்பாணன் மரபிலே பிறந்த பெண் ஒருத்திக்கு பண்களின் அடைவுவரும். அவள் திரு எருக்கத் தம் புலியூரில் உள்ளாள் என்று தெரிந்து, அவ்வம்மையை அழைத்துவந்து, நடராஜர் சந்நிதியில் டண்ணடைவு வகுக்கச் சொல்லி பல மாணவர் மாணவிகளுக்குக்கற்றுக்கொடுக்கவும் அரசன் ஏற்பாடு செய்தான்.

அப்படி வகுத்த தமிழ்ப்பண்கள் அப்போது 103ஆக இருந்து இப்போது 81பண்களாகக் குறுகியிருக்கின்றன.

சிதம்பரத்தில் உள்ள ராஜா சர் அண்ணமலை செட்டியரர் பாடசாலையில் அப்பழம் பண்கள் முறைகளைச் சொல்லிக்கொடுத்து வருகிறார்கள்.

நண்பர் பி. ஓ. கே. நடராஜ பிள்ளை அவர்கள் செட்டியார் பாடசாலையில் அப்பழம் பண்களை பண்டிட் ஜி. கே. இலக்குமண ஐயர் அவர்கள் இடத்தில் முறையாகக்கற்று அப்படியே பாடி வருகிறார். தமிழ் நாட்டுப் பண்களை பழைமை முறை தவறாது பாடி வருவதுடன், தற்கால சங்கீத முறைகளையும் பயின்று இரண்டுக்கும் உள்ள பேதா பேதங்களையும் ஆராய்ந்து, சங்கீத உலகில் ஒரு நட்சத்திரமாக விளங்குகிறார்.

மேலும், அவர் தமிழ் இலக்கியங்களாகிய சிலப்பதிகாரம், சிந்தாமணி முதலியவைகளை ஆராய்ந்து, தமிழ் நாட்டில் வழங்கி வந்து, இப்போது வழக்கு வீழ்ந்து அழிந்து போன நால்வகையாழ்களில் ஒன்றாக சகோடயாழ் என்பதைத் தம் நுண்ணறிவால் ஆராய்ந்து நிர்மாணம் செய்து, தமிழ்ப்பண்களையும், தற்கால இராகங்களையும வாசித்துக் காட்டி, பரிசுகளும் நற்சாட்சிப் பத்திரங்களும பெற்று, தமிழிசையை தமிழ் நாடெங்கும் பரப்பி வருகின்றார்.

“ பேரியாழ் பின்னும் மகரம் சகோடயாழ்
சீர்பொலியும் செங்கோடு செப்பினர்—தார் பொலிந்து
மன்னும் திருமார்ப வண் கூடற் கோமானே
பின்னு முளவோ பிற ”

என்ற பாசுரப்படி தமிழ் நாட்டில் வழங்கி வந்த யாழ்கள் நான்காகும்.

"ஒன்றுமிருபதும் ஒன்பதும்பத்துடனே
நின்ற பதினன்கும், பின்னேழும்—குன்றாத
நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன் முறையே
மேல் வகுத்த நூலோர் விதி"

என்ற பாசுரப்படிபேரியாழுக்கு 21-ம், மகரயாழுக்கு 19-ம், சகோடயாழுக்கு 14-ம் செங்கோட்டியாழுக்கு 7-ம் நரம்புகளாகக்கொண்டு வழங்கிவந்துள்ளது கண்கூடாம்.

இவை நான்குமல்லாது ஆயிரம் நரம்புகளுடைய 'ஆகியாழ்' என்று ஒன்று தமிழ் நாட்டில் வழக்கிலிருந்து வெகுகாலத்துக்கு முந்தியே வழக்கு வீழ்ந்து அழிந்து போயிற்று.

பண்டைத் தமிழர் இசையையும், தற்கால சங்கீத முறைகளையும் அறிந்துள்ள நண்பர் பி. ஒ.கே. நடராஜ பிள்ளை அவர்கள், சில மாதங்களாக நவஇந்தியாவில் பாலை-குறிஞ்சி-முல்லை-மருதம்-நெய்தல் ஆகிய பண்வகைகளைப் பற்றிக் கட்டுரைகள் எழுதி வந்தார். அக்கட்டுரைகளைப் புத்தக உருவமாகச் செய்தால் உலகுக்கு உபகாரமாய் இருக்குமென்று அவர் கருத, அவருடைய ஆப்தநண்பர் கோவை வக்கீல் திருவாளர் ஆர். ஆர். இராமசாமி நாயுடு அவர்கள் அக்கட்டுரைகளை அச்சுவாகனம் ஏற்றி உபசரித்துள்ளார். அப்புத்தகத்திற்கு முக உரையொன்று எழுதித்தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ள, அப்படியே எழுதலானேன்.

பண் என்பது என்ன, இராகம் என்பது என்ன என்று பலருக்குத் தெரியா. தாகையால் அவைகளைப் பற்றிக் கொஞ்சம் கூறிவிட்டு இந்த முகவுரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

இசையாவது எழுத்தொலியை அடிப்படையாகக் கொண்டு பிறப்பதால் பண்ணுக்குக் காரணமாய் உள்ள ஓசையாம்.

இயற்பாக்களுடனே நிறத்தை (இராகத்தை) இசைத்தலால் இசை.

இசையின் காரியமாயுள்ளது பண் தாள அறுதியோடு கூடிய நிறம் (இராகம்) பண்ணாகும். அஃதில்லாதது இராகம் எனக் கொள்க.

பெருந்தானம் எட்டினும் கிரியைகள் எட்டானும் பண்ணப்படுதலால் பண் என்றாயிற்று.

பெருந்தானம் எட்டாவன:— (1) நெஞ்சு (2) மிடறு (3) நாக்கு (4) மூக்கு (5) அண்ணுக்கு (6) உதடு (7) பல் (8) தலை.

கிரியைகள் எட்டாவன :— (1) எடுத்தல் (2) படுத்தல் (3) நலிதல் (4) கம்பிதம் (5) குடிலம் (6) ஒலி (7) உருட்டு (8) தாக்கு.

பண்--நான்கு வகைப்படும் அவையாவன :— (1) பண் (2) பண்ணியல் (3) திறம் (4) திறத்திறன்.

(1) பண் — ஏழு சுரங்களையுடையது
(2) பண்ணியல் — ஆறு ,, ,,
(3) திறம் ஐந்து — ,, ,,
(4) திறத்திறன் — நான்கு ,, ,,

இதனை,

"பாலோடணைதல் இசை யென்றார் பண்ணென்றார் மேவார் பெருந்தானம் எட்டானும்— பாவாய் எடுத்தல் முதலா இரு நான்கும் பண்ணிப் படுத்தமையார் பண்ணென்று பார்" என்ற செய்யுளால் அறியலாம்;

தமிழ் நாட்டில் முதன் முதல் வரையறுக்கப்பட்ட பண்கள் 12000 பின் அவைகள் 6000 ஆகக் குறுகின பிறகு 1000 பண்களாயின பின் கடைசியாக ஜயங்கொண்ட சோழன் காலத்தில் 103 பண்களாயின (அதாவது, பண் 17 பண்ணியில் 70-திறம் 12-திறத்திறன் 4) தற்காலம் எழு திருமுறைகளிலும் பயின்று வரப்பட்ட பண்கள் 31

இத்தகைய அருமை பெருமை வாய்ந்த பண்களைத் தமிழ்நாட்டாருக்கு தற்காலம் வழக்கில் உள்ள இராகத்தோடு இணைத்துக்காட்டும் பழம்பண்களை வரைச்செய்த நண்பர் பி: ஒ: கெ: நட்ராஜ பிள்ளைக்கு இறைவன் உடல் நலமும் ஆயுளும் திருவும் இன்னும் பல இசைநூல்கள் எழுதும் வன்மையும் கொடுத்து அருள்வாராக
இதனைக்கண்ணுறும் அன்பர்கள் இப்புத்தகத்தினைவாங்கிப்படித்து இன்புறுதலொன்றே இந்நூலாசிரியருக்கு அவர்கள் செய்யும் கைம்மாறு ஆகும்.

(முகவுரை முற்றும்)

சுபம்

முருகா

நன்றி கூறல்

1 தமிழிசைக்கருவி சகோடயாழ் பற்றிய கட்டுரையையும் "பண்டைக் காலத்தமிழிசையும்" தற்காலம் வழங்கும் இசையும் என்ற கட்டுரைகளையும் தமிழ் மக்கள் அனைவரும் படித்து, இன்புறுமாறு வாரந்தோறும் வெளிப்படுத்திய "நவ இந்தியா" தினசரிப் பத்திரிகை காரியாலயத்தினருக்கும்;

2 இந்தக் கட்டுரையில்கண்ட சகோடயாழைத் தக்க முறையில் மிக்க வனப்புடன் செய்து தவிய எம் ஹார்மோனியக் கம்பெனியின் தலைவர் திரு என். பொன்னையா ஆச்சாரி அவர்கட்கும்,

3 இந்த சகோடயாழுக்கு மழைக் காற்று தூசி வெய்யில் பட்டுகெட்டுப்போகாமல் வெளி உரைப் பெட்டியை சீரிய முறையில் செய்து உதவிய பாரிவள்ளல் உயர்திரு. அசோகா எம். கே. கிருஷ்ணச் செட்டியார் அவர்கட்கும்

4 ஷெ யாழுக்கு உள்ளுரை. அதாவது' சித்திரபடாத்துட்புக்கு என்ற வாக்கியப்படி அழகிய வில்வெட்டில் உரை செய்து உதவிய உயர்திரு அசோகா தொழிற்சாலை மானேஜர் கோவிந்த செட்டியார் அவர்கட்கும்.

5 ஷெ யாழுக்கு ஆராச்சிக்குரிய தமிழ் நூல்களை தம்முடைய நூல் நிலையத்திலிருந்து கொடுத்துதவிய உயர்திரு எஸ். ஆர். வேங்கிடகிருஷ்ண முதலியார் அவர்கட்கும்.

(6) யாழ்கட்டுரையும் தமிழிசைக்கட்டுரைகளையும் தமிழ் மக்களனைவரும் படித்து இன்புறவேண்டும் என்று தொகுத்துப் புத்தகரூபமாய் செய்துஉதவிய வித்தகர் உயர்திருவாளர் ஆர். ஆர். இராமசுவாமி நாயுடு பி. ஏ. பி. எல். அவர்கட்கும்

7 என்மனமார்ந்த நன்றி உரித்தாகுக, மேலும் இவர்கள் அனைவருக்கும் "மிருத்தகன மதுறு நீள் சௌக்கிய சகல செல்வமயாக மிக்க பெருவாழ்வும் தனகமை சிவஞானமும், உண்டாகும் படி" வேண்டும் அடியர் புலவர்வேண்டும் அரிய பொருளே வேண்டும் அளவில் உதவும் வேற்படைபண்ணலை வாடார வாழ்த்தி வணங்குகின்றேன்.

இங்ஙனம்,

பு. உ. கே. நடராஜன்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தாராபுரம் நா. ஆறுமுகம் பிள்ளை இயற்றிய

சிறப்பு பாயிரம்

நிலைமண்டில ஆசிரியப்பா

பொன்னி வளஞ்சேர் சென்னி நன்னாட்டில்
திருவளர் புவன-கிரி உடை யூரில்
சைவவே ளாளர் தங்குலம் விளக்கும்
கேசவப் பிள்ளைசெய் மாசிலாத் தவத்தால்
மகவா வந்தவன், வளரும் "அண்ணாமலைப்
பல்கலைக் கழகம்" பயின்றா போற்றும்
இசைக்கலை முழுதூஉம் எளிதில் தேர்ந்தவன்"
"சங்கீத பூடண"த் தனிப் பெரும் பட்டம்
பெற்றவன், சைவ நற்றவக் குரவர் சொல்
திருமுறை பாடும் வான்முறை யறிந்து
தேனோ பாகோ தீஞ்சுவைக் கரும்போ
வானோ ரமுதோ வண்கனிச் சுவையோ
என்றுல குள்ளார் நன்றுபா ராட்டச்
சித்தம் இனிப்பச் செவியும் இனிப்பப்
பாட வல்ல பண்புடை நண்பன்,
பண்ணும் திறமும் நுண்ணிதின் ஆய்ந்தோன்.
அந்நா ளிருந்தே இந்நாண் மறைந்து
பேரள வல்லா னோரள வேணும்
ஆரு மறியாச் சீரிய சகோடயாழ்
உண்மை யுணர்ந்து திண்மையின் முயன்று
முறைதர ஆக்கித் துறைபெற இசைக்கும்
புண்ணியம் உள்ளான், எண்ணிய புகழான்;
பொங்கு மங்களஞ் சேர் கொங்கு நன்னாட்டில்

கோவைமாநகரின் மேவி வாழ்வுறுவோன்
" நடராசப் பெயர் " ஞான சிகாமணி
இனையவன் குடபுலத் திருந்தவம் பூண்ட
சேரமான் தெரித்த சிலப்பதிகாரமும்
முடிமேற் புலவர் கொள் அடியார்க்கு நல்லார்
கலைமதி விளக்கும் இலகு பேருரையும்
ஒருமுறையன்றிப் பன்முறை படித்தும்
சொன்னயம் பொருணயம் தொடைநயம் நடைநய
எந் நயங்களும் நிறைந்தெழில் நயம் ததும்பும்
சங்க நூற்கடலிற்றுன் படிந்தாடியும்
இசை தரும் ஒளி மணி எல்லாமெடுத்துப்
பொருந்திய அறிவால் திருந்திய பயிற்சியால்
ஒத்த பண்டைக்காலத் தமிழிசையும்
தற்காலம் வழங்கும் இசையும் என்னும்
பொன்னியல் நூலில் நன்னர் கோத்த
அணியினைப் பைந்தமிழ் அன்னைக் கன்பால்
அணிந்து மகிழ்ந்தனன் அந்நூல் தனை நவ
இந்தியாவிற்கண் டிதயங்களித்தேன்
பாலையும் நேர்ந்தேன் பரந்தகாந்தாரம்
அடைந்தேன் செவ்வழி ஆய்ந்தேன அம்மா!
இன்னதன் பெருமையை யானோ அறிவேன் ?
பல்வகையிசையின் பாடலெலாங்கண்ட
அறிஞர் குழாமே அறிதருமினிதே.

சுபம்



சகோடயாழ்

இந்நூல் ஆசிரியர்: பு. உ. கே. நடராஜ பிள்ளை

சகோடயாழ்

"சகோடயாழ்" என்பது பண்டைக்காலத் தமிழிசைக்கருவியின் பெயர். யாழ் என்பதும் குழல் என்பதும், பண்டைக்கால இசைக்கருவிகளின் பெயர்கள். இவ்விரண்டு கருவிகளில் குழல் மட்டும் தற்காலம் உபயோகத்திலிருக்கிறது 'குழலினிது யாழினிது' என்றார் திருவள்ளுவர். யாழைப்பற்றி நம் நாட்டவர்கள் வெகுகாலமாக மறந்துவிட்டார்கள். பண்டைக்கால இசைக்கருவிகளைப்பற்றி சங்க நூல்களில் ஒன்றாகிய பரிபாடலில் கடவுள் வாழ்த்தில் 41வது வரி முதல் 46வரி வரையுள்ள அடிகளில் 'தெய்வப்பிரமஞ்செய்வோரும் கைவைத்திமிர் குழல் காண்போரும் மிரதிகாமன் இளிகுரல் சமங்கொள்வோரும்' என்று சொல்லப்படுகிறது. இதற்கு பரிமேலழகர் உரையில் மிரதிகாமன் என்பது சகோடயாழ் என்றுபொருள் சொல்லுகிறார். சிலப்பதிகாரம் என்னும் நூலில் அரங்கேற்றுகாதையிலும் வேனிற்காதையிலும் சகோடயாழைப்பற்றி மிக விரிவாகவும் விவரமாகவும் கூறப்பட்டிருக்கிறது. கேள்வி என்பது யாழ் கருவிக்கு ஒரு பெயர். 'ஈரேழ்' தொடுத்த செம்முறைக் கேள்வி எனவும், பிழையாமரபின் ஈரேழ் கோவை எனவும், தெய்வஞ்சான்ற தீம் சுவை நல் யாழ் எனவும் போற்றப்பட்ட சகோடயாழ் பலவழியிலும் சிறப்புடையது. இலண்டன் மாநகர் பழம்பொருட் காட்சி சாலையிலேயுள்ள அமராவதி கல்லோவியத்தில் காட்டப்பட்டிருப்பது சகோடயாழ். இரண்டாம் நூற்றாண்டு கல்லோவியத்திலே சகோடயாழுருவத்தினை நாம் காணப்பெற்றது அமராவதி கோலி என்னுமிடங்களில் கண்டெடுக்கப் பட்டு சென்னைக் காட்சி சாலையில் வைக்கப்பட்டிருக்கும் பாடினி உருவங்களில் ஒன்றில் இந்த சகோடயாழ் உருவத்தைக்காணலாம். முன்னாளிலே பாணன் கையிலும் பாடினி கையிலும் இருந்த யாழ் கருவியானது இளங்கோவடிகள் காலத்தில் இசையாசிரியன் கையிலும் நாடக மகளிர் கையிலும் போய்ச் சேர்ந்துவிட்டது. அதற்கேற்ப அக்

கருவியும் சித்திரப் படத்துட்புக்குச் செழுங்கோட்டின் மலர் புனைந்து" மைத்தடங்கண்மணமகளிர் கோல போலவனப்பெய்தி விளங்கியது. ஆளுடைய பிள்ளையார் காலத்தில், தெய்வ மீந்த பொற்பலகை மீதேறி அன்பர்கள் உள்ளத்தை உருக்கி அதாவது திருநீலக்கண்டப் பெரும்பாணரோடும், மதங்கசூளாமணியா ரோடும் அம்மையப்பர் உறைகின்ற திருக்கோயில்களை வலம்வந்து முத்தமிழ் விரகரால் பாராட்டப்பெற்றது. பிறகு அரசிளங் குமரி களுக்கு இன்னுயிர்ப் பங்கியாகி அவர்களுக்கேற்ற தலைவரை அவர்கட்பால் சேர்த்து சீரும் சிறப்பும் உடைய அந்த சகோட யாழ் பல நூற்றாண்டுகளுக்கு முன் மறைந்துவிட்டது. அத்தகைய சிறப்புவாய்ந்த யாழின் இசையினை மீட்டும் ஒருமுறை தோற்று மாறு செய்தல் தமிழகத்தின் மறுமலர்ச்சிக்கு சிறந்ததோரேது வாகுமென்று நினைத்து பல இன்னல்களுக்கிடையே இதை ஒருவாறு திருவருள்கூட்ட இனிது செய்துமுடித்தேன். இதில் 14 நரம்புகள் கட்டப்பெற்று சங்கீதத்தை இனிய சப்தத்துடன் வாசிக்கமுடியும் என்பதை அந்தக் கருவியை உபயோகப்படுத்தி அறிந்த விஷயங்களை நான் இப்போது தெரிவிக்கிறேன்.

(1) சகோடயாழ் அமைப்பு

தெய்யவுடப்பளவு தொண்ணூற்றாறங்குலியாம்
மெய்யெழுத்து நின்றியங்கு மெல்லத்தா —— வையத்து
இருபாலுநாற்பகோடேழ்பாதி நீக்கி
கருவாகு மாதாரரங்கானை .... (சிகண்டியார்)

அதாவது மனிதனின் புருவமத்தி முதல் கருஸ்தானம் வரை 47½ அங்குலம் உள்ள சரீரத்தின் மேல் பாகத்தை அளந்து அதில் மூன்று சாண் நீளத்தில் சுரத்தானம் அமைத்தல் வேண்டும். அங்குலம் என்பது அவர் அவர்கள் பெருவிரல் அளவு மீதி ஒரு சாண் காலியாய் விடுத்து அமைக்கவேண்டும். சாண் என்பது 12 விரற்கடை. அதாவது ஒரு மனிதன் நிமிர்ந்து உட்கார்ந்தால் 4 சாண் நீளம் முதுகு தண்டின நீளம் 3 சாண் தலைக்கு ஒருசாண் நீளம். முதுகுதண்டின்நீளம்தான் தலையின் சுற்றளவும். யாழின் பத்தர் அதாவது குடம் சுற்றளவும் 3 சாண் இருத்தல் வேண்டும்.

2 யாழுக்கு நரம்புகள் அமைக்கும் முறை

(சிலப்) வேனிற்காதை (பக்) 202.

இணைஎனப்படுவது கீழும் மேலும்
அணையத் தோன்றும் அளவின என்ப

(இணை) என்பது இரண்டு நரம்புகள்
கண்ணிய கீழ் மூன்றாகி மேலும் நண்ணல்வேண்டும்
இரண்டு நரம்பே மேலும் கீழுமாக சில ந ர ம் பு க ள்
அமைத்தல் வேண்டும்

3 யாழுக்கு சுருதிகூட்டும் முறை

குரல் பந்தமாக இளி சமனாக,ஏற்றிய இளிகுரல் என்றிரு நரம்பின் ஒப்பக் கேட்டும் உணர்வினாகி என்றும் வண்ணப்பட்டடையாழ் மேல்வைத்து குரல்வாய் இளிவாய்க் கேட்டனள் மாதவி கானல்வரி யில், குரல்நிலையென்பது அமைவரக்கிளப்பில் குரல் முதலாக இணை வழி கேட்டு இணையிலா வழிப் பயனோடு கேட்டுந்தாரமும் உழை யுந் தம்மில் கேட்டுத் துத்தமும் விளரியுந்துன்னறக் கேட்டுத் தள ராதாகிய தன்மைத்தாசம். இம்மாதிரி கடற்கரையில் கோவலனு டன் இருந்த மாதவி காதி கையிலிருந்து சகோடயாழை வாங்கி சுருதி சேர்த்துக்கொடுத்தாள் இளங்கோ உரை

குரல்	துத்தம்	கைக்கிளை	உழை	இளி	விளரி	தாரம்
ஸ	ரி	க	ம	ப	த	நி

தற்கால சங்கீத உலகில் நரம்புக் கருவிகள் வாசிப்பவர்கள் எல் லோரும் (குரல்) ஷட்ஜமத்தை மட்டும் ஆதார ஸ்ருதியாக வைத் துக்கொண்டு வாசிக்கிறார்களே தவிர (இளி) பஞ்சமத்தையும் ஆதா ரஸ்ருதியாகவைத்துக்கொண்டுவாசிப்பதில்லை. ஆனால்சகோடயாழில் மட்டும் தான் இம்மாதிரி வாசிக்க முடியும். இப்படி வாசிப்பதனால் ஆரம்ப முதல் கடைசி வரை நட்புச் சுரங்கள் பேசிக்கொண்டே வருவதால் தெய்வ கானமும் உண்டாகும்.

நட்புச் சுர விவரம்: — ஸ ப ரி க ம த நி ஸ ஸ நி த ம க ரி ஸ இந்த முறைக்கொண்டுதான் திருநீலகண்ட யாழ்பாணரும் திருப்பாணாழ்வாரும் பாணபத்திரரும் வாசித்திருக்கவேண்டுமென்று தோன்கிறது. இவ்வகானம் என்பதற்கு காரணம் ஸ. சிவம். ப. சக்தி. சக்தியும், சிவமும் சேர்ந்தால்தான் உலகத்தோற்றம். வெறும் சிவம் மட்டும் இருந்தால் அது சூனியம் என்று சித்தாந்தம் கூறுகிறது.

(4) யாழ் மனித சரீரத்தை ஒத்தது

மனிதனுக்கு தோஷத்தினால் சரீரம் பாடுபாடு அடைவதுபோல் யாழுக்கும் உண்டு என்பதற்கு மேற்கோள். திரு. (பெரிய) திருநீ புரா 6-வது பாட்டில்:

அந்தரத்தெழுந்த ஓசை அன்பினில் பாணர் பாடுஞ்
சந்தயாழ் தரையில் சீதந்தாக்கில் வீக்கழியுமென்று
சுந்தரப்பலகை முன்னீரிடுமெனத் தொண்டரிட்டார்
செந்தமிழ் பாணனு நந்தி நவருள் பெற்றுச்சேர்ந்தார். (மேலும்)

ஒரு மனிதன் ஆதார ஷட்ஜமம்பிடித்து பாடும்போது ஒரு மூச்சில் 15 (செகண்டு) நேரம்தான் பாட முடியும். அதேபோல் இந்த சகோடயாழையும் ஒருதரம்மீட்டினால் 15 செகண்டு நேரம் ஒலி இருக்கிறது. திருநீலகண்ட யாழ்பாணர் வாசித்தது சகோடயாழ் என்பதற்கு, மேற்கோள். (மேற்படி புரா) 2-வது பாட்டில்.

ஆலவாயமர்ந்த கோவில் வாயிலே அடைந்து நின்று
பாலையிரேழ் கோத்த பண்ணில் கருவி வீக்கி,
காலமாதரித்த பண்ணிற் கைபலமுறை யாராய்ந்து
எலவார் குழலார் பாகர்பாணிகள் யாழிலிட்டார் (மேலும்)

திருநீலநக்க நாயனார் புராணம் 31-வது பாட்டில்:

ஆங்கு வேதியிலறாத செந்தீ வலஞ் சுழிவற்று
ஓங்கு முன்னாயிலொரு படித்தன்றியே யொளிர
தாங்கு நூலவர் மகிழ்வுறச் சகோடயாழ்த் தலைவர்
பாங்கு பாணியாருடன் அருளால் பள்ளி கொண்டார்.

என்பதனால் நன்கு விளங்கும்.

(5) யாழ் வேறு, வீணை வேறு.

தற்காலத்திலுள்ள இசைப் புலவர்கள் யாதுகாரணம் பற்றியோ வீணைதான் யாழ்என்றுசாதிக்கிறார்கள். யாழ் வேறு, வீணை வேறு என்பதை அடியிற்கண்டும் மேற்கோளினால் நன்கு விளங்கும். மாணிக்க வாசகர் பாடிய திருவாசகத்தில் திருப்பள்ளி எழுச்சியில் 4-வது பாட்டில்;"இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்" என்றும் திருப்படையாட்சியில் 6-வது பாட்டில் 'வீணைமுரன்றெழும் ஓசையி லின்பம் மிகுத்திடுமாகாதே" என்றும், திருக்கோவையில் 7 வது பாட்டில்,"யாழுடையார் மணங்காணணங்காய் வந்தகப்பட்டதே" 322-வது பா. யாழின் மொழி மங்கை பங்கள் 375 பா. விறலியு பாணனும் வேந்தற்குத் தில்லையிறை யமைத்த திறலியல் யாழ் கொண்டு வந்து நின்றார், என்றும், அப்பர் தேவாரத்தில் 5-ந் திருமுறை 6 பதி. 6 பாட்டில் பண்ணார்ந்த வீணை பயின்ற விரவாலனே. 104 பதி. 7 பா. குழல் கொண்டும் யாழ் கொண்டும் 5-ந் திருமுறை 7 பதி. 1 பா. குழல்வீணை கொடு கொட்டி

12 பதி, 6 பா. குழலையாழ் மொழி.

41 பதி. 5 பா. யாழின் பாட்டை யுகழ்ந்த அடிகளே

6-ந் திருமுறை

57 பதி. 7 பா. 'பண்ணொடு யாழ்வீணைப யின்றாய் போற்றி'

(8)திருபடையாட்சியில் 6 வது பாட்டில்

வீணை முரண்றெழு மோசையிலின்ப மிகுத்திடுமாகாதே

(9)(திருக்கோவை)

7 வது பா யாழுடையார் மணங்காண ணங்காய் வந்தகப்பட்டதே
79 „ „ யாழு மொழிமொழின் முத்தெழுதி
93 „ „ யாழார் மொழிமங்கை
230 „ „ யாழின் மொழியன் மனப்பேதை......
269 „ „ யாழேர் மொழியாள்
322 „ „ யாழின மொழிமங்கை பாங்கன் என்றும்

(11) திருநாவுக்கரசு நாயனார் தேவாரத்தில்

(4) திருமுறை
2 வதிபதிகம்
4வதுபாட்டில் } மடமான் மறிசொற்கலையும்
மழுப்பாம்-பொருளைகயில் வீணை
3041 தங்கையில் யாழும் வைத்தானை தாமரைமலரும்வைத்தார்

ஷை பதிகம்(9 பா) யாழின்மொழியவளஞ்சா

ஷை 6 பதி (6 பா) பண்ணார்ந்த வீணை பயின்றவிரலனே

„ 10 பதி (1 பா)மலைத்தெழ சடையினர்மழலை வீணையர்

„ 19 பதி 10 பா கோதிலாவேடத்தன் கொண்டதோர் வீணையினான்

(7) திருவாசகத்தில் திருப்பள்ளி எழுச்சியில்

"இன்னிசை வீணையர் யாழினர் ஒரு பால்" என்பதாலும்—

(10) திருக்கோவையில் பாணன் வரவுரைத்தல் என்ற தலைப்பின் கீழ் (375) பாட்டில்.

விறலியும் பாணனும் வேந்தற்கு இல்லைபிறையமைத்த திறலியல்

யாழ் கொண்டு வந்து நின்றார் சென்றிராத் திசைபோம்:

33 பதி 6 வது [பா] அங்கையுள் அனலும் வைத்தார் அறு வகைச் சமயம்

வைத்தார் தங்கையில் வீணை வைத்தார்.

66 பதி 9 வது (பா) கொக்கரை தாளம் வீணை பாணிசெய் குழகர் போலும்:

104 பதி 7 வது (பா) தாளங்கள் கொண்டும் குழல்கொண்டும் யாழ் கொண்டும் தாமங்வனே.

111 பதி 8 வது (பா) கொடு கொட்டி கொக்கரை தக்கை குழல்தாளம் வீணை மொந்தை

112 பதி 7 வது (பா) வருங்கடல் மீளநின்றெம் மிறை நல் வீணை வாசிக்குமே

5 திருமுறையில்

5 பதி 6 வது (பா) வீணைகள் பாடும் விகிர்தனார்

7 பதி 1 வது (பா) கொக்கரை குழல் வீணை கொடு கொட்டி

12 „ 6 „ (பா) குழலை யாழ் மொழியாரிசை வேட்கையால்

41 „ 5 „ (பா) யாழின் பாட்டையுகந்த அடிகளே

51 „ 7 „ பா பண்கெழுமிய வீணையும்

53 „ 1 „ (பா) பாணில் வீணை பயின்றவன் வீரட்டம்

9 „ 1 „ (பா) மாசில் வீணையும் மாலை மதியமும்

6 திருமுறையில்

2 பதி 10 வது (பா) வேதங்களோதி யோர் வீணையேந்தி

ஷை 11 ஷை ஓதுவதும் வேதமே, வீணையுண்டே

4 பதி 5 வது (பா) சூடுமே குடமுழவம் வீணை தாளம்

9 ஷை 2 வெள்ளை மாலை விரி சடை மேற்றான் சூடி வீணையேந்தி

ஷை 6 அங்கை வீணை யேந்தி

13 பதி 9 வது (பா) இடங்கை வீணை யேந்தி

23 ,, 2 ,, கைகிளரும் வீணை வலவன் கண்டாய்

29 ,, 1 ,, குருமணியை குழல் மொந்தை தாளம் வீணை கொக்கரையின் சச்சரியின் பாணியானை

35 ,, 2 ,, வேதத்தெலிகொண்டு வீணை கேட்பார் வெண்காடு மேவிய விகிர்தனூரே

48 ,, 2 ,, பண்ணார்ந்த வீணை பயின்றான் தன்னை

57 ,, 7 ,, பண்ணொடு யாழ் வீணை பயின்றாய் போற்றி

67 ,, 4 ,, வேதத்தின் பொருள்ளெள் வீணை கேட்பானை

87 ,, 7 ,, மெய்யவன் காண் பொய்யர் மனம் விரவாதான்காண் வீணையோடிசைந்து மிக்கு பாடல் மிக்க கையவன் காண்

96 ,, 10 ,, சாமத்தின் இசை வீணை தடவிக்கொண்டார்

97 ,, 4 ,' பண்ணார்ந்த வீணை பயின்றதுண்டு என்பவைகளால் நன்கு விளங்கும்.

என்பவைகளால் நன்கு விளங்கும். இம்மாதிரி எடுத்துக்காட்டுகள் பலவுள. விரியுமென்று இம்மட்டோடு நிறுத்துவாம்.

குறிஞ்சி

பண்டைக் காலத்தில் தமிழன் எல்லாக் கலைகளிலும் தலைசிறந்து விளங்கினான் என்றால் அது மிகையாகாது. தமிழன் என்பான் தன் மானங்காப்பான் பிறர் துன்புற சகியான் வந்த எந்தப் பிறமொழிக்கும் வரவு கூறி வகை செய்து வாழ்வளித்து வரிசையெல்லாம், தந்தவர்கள் தமிழரைப் போல் வேறு யாரும் தாரணியில் இணை சொல்லத் தருவாருண்டோ, அந்தப் பெருங்குணத்தில் இன்னும் குறைவோமில்லை, ஆனாலும் தமிழ் இனங்கள் வாழவேண்டின் சொந்த மொழிக் கலைகளெல்லாம் சுருங்கித் தேயப் பார்த்திருந்தும் சோம்புவது அறிவோ சொல்வீர். முக்கிப் பயின்று, பல முயற்சி செய்து மூக்கானும் வாக்குறைத்து மூச்சு வாங்கித் திக்கு முக்கலாடுகின்ற பாஷையெல்லாம் சிறப்பாக சங்கீதத் திறமையென்றும், சிக்குமுக்கு உச்சரிப்புச் சிறிதும் வேண்டாச் சீரிலகும் எழுத்தியல்பு சேர்ந்ததாகித் தக்கமிக்கோர் இனிமையெனும் தமிழில் நாதச், சங்கீதம் குறையென்றால் தரிக்கலாமோ, கலையென்

ருல் உணர்ச்சிகளைக் கவரவேண்டும். களிப்பூட்டி அறிவினைப்போய் கவ்வவேண்டும். நிலைகொள்ளாச் சிந்தனையை நிற்கச் செய்து நீதி நெறி தெய்வ நினைப்பூட்டற்கு உரேறு, விலையில்லாப் பெருமை பல உடையதேனும், விளங்காத பாஷையிலே பாட்டைக் கேட்டுத் தலையெல்லாம் சுழலுகேற அதைக் திட்டாலும், தன கதுவோர் கலையின் பயந்த வதுண்டோ, ஆகையால் தமிழ்நாட்டில்தமிழிசைக்கே ஆதரவு அகத்தியமாய் அதிகம் வேண்டும்.

என்ற தமிழின் இசைக்கலையில் மட்டும் களைத்தவனு என்பதற்கு பதில் இவ்வாறு முதல் முதலில் தமிழன் கண்டு பாடிய இசை குறிஞ்சி, குறிஞ்சி என்னும் பெயர் காரணப் பெயரா அல்லது இடுகுறிப் பெயரா என்று வினவில் காரணப்பெயர்தான் யாது எனில் விளக்குவாம். குறிஞ்சி என்பது ஒரு செடியின் பெயர். அச் செடியானது ஏனைய செடிகளை போலல்ல. பன்னீராண்டுக்கு ஒரு முறை பூத்து பலகாத தூரம் மணம் வீசும். பூ நீல நிறமுடையது தற்காலம் நீலகிரி என வழங்கு மலையானது. ஒரு காலத்தில் ஏன் இப்போதுங் கூட, சமீபத்தில அதாவது 1946-ம் ஆண்டில் கூட நேரில் பார்த்தவர்கள் பலரில் யானும் ஒருவன். அம்மலையானது குறிஞ்சிச் செடியால் நிறைந்து பூத்து நீல நிறமாகும் இந்தபடியால் அதற்கு நீலகிரி என வழங்குகிறார்கள், மலையும் மலையைச்சார்ந்த இடமும் குறிஞ்சி நிலம். இந்நிலயானது இயற்கைவளமுடையது. வானோங்கி வளர்ந்த மலையும் நிலனோக்கிவீழும் அருவியும் வெய்யில் நுழைபறியாக்காயில் நுழைப்பொதும் பரும் மரமும் செடியும் மணம் வீசும் கொடியும் நிறைந்த வளப்புடைத்து: குறிஞ்சியாவது புணர்தல் பொருட்டு அஃது இயற்கைப் புணர்ச்சி முதலியனவாம். புணர்தல் நறுங்குறிஞ்சி என்ற சங்க நூல்கள் கூறுகிறது. இத்துணைச் சிறப்பு வாய்க்க குறிஞ்சி நிலத்தில் வாழுங் கள்ளங்கபடமற்ற மக்கள் பாடுவது குறிஞ்சி இசை. இந்நிலக்கடவுள் முருகன்.

விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ என்பர் நக்கீரர் மலைகளில் இருக்கவேண்டிய தெய்வம் முருகன் தான். மற்றதெய்வங்களுக்கு அங்கு இடமில்லை.

குறிஞ்சி நிலக்கடவுள் முருகன். தமிழர்களுக்கு வழிபாட்டுத் தெய்வமும் அது. குறிஞ்சி இசைக்கும், முருகனுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. என்பதை விளக்குவாம் அங்கில மக்கள் முருகனை குறிஞ்சி பாடி வணங்கினார்கள் என்பதை நறும் புகை எடுத்து குறிஞ்சி பாடி என்பார். நக்கீரர் பண்டைக்கால இசைக்கருவிகளில் துளைக் கருவியில் குழலும் நரப்புக்கருவியில் யாழும் தலைசிறந்து விளங்கியது. இயற்கைகருவி குழல் ஆனபடியால், இயற்கைத் தமிழ்கடவுள் முருகன் கையிலெடுத்து இயற்கை. இசைக் குறிஞ்சியை இசைத்தார். இதைகுழலன், கோட்டன், குறும்பல்லியத்தன் என்பர் நக்கீரர். குழலில் இயற்கையாய் விரல்களைத் திறந்து வாசித்தால் குறிஞ்சி ராகம் பேசும். அதைத் தெய்வீக ராகம் என்றும் சொல்லலாம். ஏனென்றால், தமிழ்த் தெய்வமே குழலில் குறிஞ்சியை வாசிடபதால்தான், அத்துணைச் சிறப்புவாய்ந்த குறிஞ்சி ராகம், தற்காலத்தில் என்ன பெயரால் வழங்குகிறது, என்பதைத் தெரிந்துகொள்ளத் தமிழர்கள் விரும்புவதும் இயற்கை தானே. இனி அதை விளக்குவாம். பண்டைக் காலத்திலுள்ளவர்கள், வழங்கிய பழக்கங்கள் தனித்தமிழ் சொற்களில் இருக்கின்றன. நிறம் என்பதை இப்போது ராகம் என்றும், பாணி, என்பதைத் தாளமென்றும், தூக்கு என்பதைத் தாள பேதங்கள் என்றும் அந்த எடுப்புகள்.

(1) சேந்தூக்கு. (2) மதலைத்தூக்கு. (3) துணிபுத்தூக்கு. (4) கோயிறறாக்கு. (5) நிவப்புத்தூக்கு. (6) கழாறறாக்கு. (7) நெடுந்தூக்கு. என்பவைகளை இடபோது:

1. துருவம். 2. மட்டியம், 3. ரூபகம் 4, ஜம்பை, 5. திரிபுடை, 6. அடம். 7. ஏகம், என 7 தாளங்கள் ஆகிறது.

(சுரங்கள்) குரல். துத்தம். கைக்கிளை உழை. இளி விளரி. தாரம் இவை முறையே, ச ரி க ம ப த நி என்றும் வழங்கும் பண்டைக் காலவழக்கம்.

இயற்கையாயுள்ள உதாரணத்தினல் விளங்குவது தமிழரின் மரபு இயற்கையானது என்றும், மாறாது என்னும் கருத்துடைய

வர்கள் (ஒரு ஸ்தாயில்) 12 சுரஸ்தானங்கள் என்பதும், அதில் தொனிப்பது. 12 சுரங்கள் என்பதும், அதில் சஞ்சரிக்கப்பட்ட சரிகமபதநி சங்கேதாக்ஷரங்கள் 7 என்பதும், சங்கீத அனுப வத்திற்கும் யுக்திக்கும் ஒயாமையாய்ப் பொருந்தியிருக்கின்றன. ஆகையால் நாதத்தின் பாணி 12 ராசிமண்டலம் 12. மகம் 12. மாதம் 12. இதற்குள் வாரம் 7. வர்ணம் 7. இயற்கை கிரகங்கள் (சூரியாதி நவக்கிரகங்கள்) 7. இவைகளை எக்காலத்தும், எத்தேயத்தும் எல்லோராலும் ஒத்துக்கொள்ளக்கூடியது. இவைகளைக் கொண்டு விளக்குவாம். சிலப்பதிகாரத்து உரையாசிரியர் அடியார்க்கு நல லார் ஆய்ச்சியர் குரவை கூத்தில் தெளிவாய்ச் சொல்லுகிறார்.

துலைநிலைக்குரலுந் தனுநிலைத் துத்தமும்
நிலைபெற கும்பத்து நேர் கைக்கிளையும் மீனத்துழையும்
விடைநிலத் திளியும் கனக்க கத்து
மன்னிய விளரியும் அரியிடைத் தாரமும் அணைவுறக் கொளலே.

(இதன் பொருள்)

துலா ராசியில்	குரலாகிய	ஸட்ஜமமும்
தனுசு ,,	துத்தமாகிய	ரிஷபமும்
கும்பம் ,,	கைக்கிளையாகிய	காந்தாரமும்
மீன ,,	உழையாகிய	மத்திமமும்
ரிஷப ,,	இளியாகிய	பஞ்சமமும்
கடக ,,	விளரியாகிய	தைவதமும்
சிம்ம ,,	தாரமாகிய	நிஷாதமும்

இவைகளை முறையே வரிசைப்படுத்தி பார் போமானால், ஸட்ஜமம் சதுஸ்ருதிரிஷபம் அந்தரகாந்தரம் சுத்த மத்திமம் சதுஸ் ருதி தைவதம் கைசிகிநிஷாதம் ஆகிரபடியால் இதற்குத் தற்காலத் தில் அரிகாம்போதி ராகம் என்று வழங்குகிறார்கள். இத் தெய்வீக இசையைத்தான் முருகனும் குழலில் வாசிக்கிறார். அதற்கு குறிஞ்சி இசை என்பது பண்டைக்காலப் பெயர். குறிஞ்சி நாற்பெரும் பண்களில் ஒன்று. நாற்பெரும் பண்ணும் சாதிநான்கும் பாற்படுதிற னும் பண்ணெனப்படுமே. என்பர் அடியாருக்குநல்லார். ஆரம்பத்தில் குழல் பழகுபவர்கள், இந்தராகத்தில் பழகுவது நன்மைபயக்கும் வாசிப்பதும் சுலபம்.

12 சுரந்தானங்களும் 12 ராசியில் அமைத்த விவரம்

பன்னிரண்டே நாதவொலிப் பான்மை பதினுறென்ருல் முன்னூற்குச் சாலமுரணுடைமை மன்னுயாழ் கண்டு மிளங்கோவடிகள் காட்டுமிவ்விராசிகளைக் கொண்மிவ்விபரங்கள்கொள்.

(1)	துலாத்தில்	....	ஸட்ஜமம்
(2)	விருச்சிகத்தில்	....	சுத்தரிஷபம்
(3)	தனுசில்	....	சதுஸ்ருதிரிஷபம்
(4)	மகரத்தில்	....	சாதாரணகாந்தாரம்
(5)	கும்பத்தில்	....	அந்தரகாந்தாரம்
(6)	மீனத்தில்	....	சுத்த மத்திமம்
(7)	மேடத்தில்	....	ப்ரதிமத்தமம்
(8)	இடபத்தில்	....	பஞ்சமம்
(9)	மிதுனத்தில்	....	சுத்ததைவதம்
(10)	கடகத்தில்	....	சதுஸ்ருதிதைவதம்
(11)	சிம்மத்தில்	....	கைசிகிநிஷாதம்
(12)	கன்னியில்	....	காகலிநிஷாதம்

ஆய்ச்சியர் குரவைக் கூத்தில் குடமுதலிட முறையாக் குரல் துத்தங்கைக்கிளை யுழை இளிவிளரிதாரமென வருவதால், நன்கு விளங்கும்.

மேட ராசிக்கு திசை சொல்லுமிடத்து. கிழக்கிலிருந்து ஆரம்பம் செய்ய வேண்டும். ஆனல் இதில் குடமுறை என்று துவங்குவதால் குடதிசை மேற்கு. மேற்கில் உள்ள ராசி துலாம் எனக் கண்டுகொள்க.

நெய்தல்.

சென்ற வாரத்தில் குறிஞ்சியைப் பற்றி எழுதியிருந்தோம் இப்போது நெய்தலைப்பற்றி ஆராய்வோம்.

பண்டைக்காலத்தில் ஒவ்வொரு நாட்டு மக்களுடைய வாழ்க்கை வரலாறுகளை எல்லாம் நாம் அறிந்து கொள்ள ஆதாரமாயிருப்பன. அம்மக்களின் மொழிகளிலுள்ள இசை இலக்கியம், இலக்கணம், முதலியனவாம். இவற்றுள் மிகச்சிறந்தது இசையேயாம். தொல்காப்பியத்திற்குப் பன்னூறாண்டுகளுக்கு முன்னரே தோன்றிய பல தமிழிசை நூற்கள் தமிழகத்தில் விளங்கி இருந்ததென்பது வெளிப்படை. ஆனால் அந்த நூற்றூண்டுகளின் தொகையை இவ்வளவென்று ஒருவராலும் ஓராற்றலும் கூற முடியாது.

1. மோகஞ்சதாரோ 2. ஹாரப்பா என்னும் இரு நகரங்களைத் தோண்டி அவற்றிலுள்ள பலபுதை டுபாருள்களை ஆராய்ந்தவர்களும் திராவிடர்கள் நாகரிகம் 5000. ஆண்டுகளுக்கு முன் சிறந்து விளங்கிற்று என்று முடிவுகட்டி இருக்கிறார்கள். தென் இந்தியாவின் தென் பகுதியிலும் கடல் கொண்ட குமரி முனையின் தென் பகுதியிலும் பல புதைப் பொருள்கள் இருக்கும் என்பதற்கு ஐயமில்லை. இவை வெளி வருங் காலத்து இவற்றை ஆதாரமாகக் கொண்டு தமிழிசையின் தோற்றத்தையும் தமிழர்களின் நாகரிகத்தையும் குறைந்தது பன்னீராயிரம் ஆண்டுகளுக்கு முந்தியன என்று கூறமுடியும் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன். சிற்க சரித்திர காலத்துக்கு முன்னமே இலங்கைக்குச் சென்ற இராமரைப் பற்றிய ஒரு செய்தியும். இந்நெய்தல் பாட்டில் காணப்படுகிறது. இந்தியாவிலிருந்து இலங்கைக்குச் செல்பவர்களும் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு வந்தவர்களும் தனுஷ்கோடி வழியாகத்தான் தங்கள் பயணத்தை செய்ய வேண்டும். தாய் நாட்டினரையும் சேய் நாட்டினரையும் வழியனுப்பும் இத் தனுஷ்கோடி. நெய்தல் பாக்களுள் காணப்படுகிறது. இன்று இலங்கையையும் இந்தியாவையும் பிரிப்பது குறிஞ்சியன்று, முல்லையன்று, மருதமன்று, பாலையுமன்று இந் நெய்தலேயாம். (நெய்தலென்பது

கடலும், கடல் சார்ந்த இடமும் இரங்குதலும் இரங்குதல் நிமித்தமும் ஆம். தலைவனைப் பிரிந்த காதலிக்கு கடலும் கானலும் காண்டொறும் இரக்கமிகுமாதலால் அந்நிலத்தை நெய்தல் என்றனர். இக்கடற்கரையில் இரக்கம் மிகும் நேரம் பொழுது படும நேரம் [மாலை] ஏனெனில் வெஞ்சுடர் வெப்பந் தீர தண்ணறுஞ் சோலை தாழ்ந்து நிழல் செய்யவும் தண்பகம் பட்டதெண் கழி மேய்ந்து பல்வேறு வகைப்பட்ட புள்ளொலாங்குடம்பை 'நோக்கி உடங்கு பெயரவும் புன்னை முதலிய பூக்களின் மணமும் நெடுந் திரைகளின் மேல் நிலவொளி வீசவும்.

காதல் கைமிக்கு கடற்கானும் கானற்கானும் நின்று கடந்து வேட்கைப்புலப்பட உறைதலின் அவ்விடத்துக் காமக்குறிப்பு வெளிப்பட்டு இரங்கற்பொருள் சிறத்தலின் என்க. இந்நிலமக்கள் பாடுவது நெய்தல் பாட்டிசை. குறிஞ்சி முதலிய நாற்பெரும் பண்களுக்கும் எவ்வகையில் சிறப்புடையன என்பதை புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், என்றார். தொல்காப்பிய சூத்திரத்திற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர். நெய்தநிலத் தெய்வம் வருணன் உயர்ந்தோர் சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுளைச்சி, திமிலர், தாழ்ந்தோர் துணைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர், புள், கடற்காகம், அன்னம், அன்றில், விலங்கு, சுறு, முதலை, நீர், உவர்நீர்க்கேணி, கவர்நீர், பூக்கள், தாழம்பூ; முண்டகப்பூ, நெய்தல்பூ, அடப்பம்பூ. மரங்கள், கண்டல், புன்னை, ஞாழல், உணவு, மீன், உப்புவிற்றுப்பெற்ற பொருள்.

பறை, மீன் கோட்பறை, நாவாய்பம்பை, தொழில், மீன்பிடித்தல், உப்புண்டாக்கல், விற்றல். மீறுணக்கல், அவற்றை உண்ண வரும் பறவைகளை யோட்டுதல், கடலாடல், யாழ், நெய்தல் யாழ்,

நெய்தல் இலை யானையின் காதுபோன்ற பசிய இலைக்கு மேல் உயர்ந்து தோன்றும். திரண்ட காம்பைக்கொண்ட கருநிறமுடைய நெய்தல் நிலமக்கள் பாடும் இசை நெய்தல். அந்த இசையானது தற்காலத்தில் என்ன பெயரால் வழங்குகிறது என்பதை விளக்குவாம். சிலப்பதிகாரத்தில் ஆய்ச்சியர் குரவைக் கூத்தில் மது

மையில் கண்ணகி அடைக்கலமிருந்த ஆய்ச்சியர் வீட்டில் சில துர்நிமித்தங்காண அதனால் ஏற்கேடு வராதிருக்க நாரணனைக் கொண்டாடிக் குரவைக் கூத்தெனும் ஓர் கூத்தாடினார்கள். அதில் இளங்கோவடிகள் எடுத்துக்காட்டியது. ' குட முதலிட முறையாக்குரல் துத்தங் கைக்கிளை உழை இளி விளரி தாரம்'' என விரிதரு பூங்குழல் வேண்டிய பெயரே. (இதன் பொருள்) குட-முதல் என்பது துலாராசி முதல். அதாவது, குரல் முதல்தார மிறுவாய்க்கிடந்த நிரலேழும் செம்பாலை நேர். என்பதால். செம்பாலை என்பது துலாராசியில் குரலாகிய ஸட்ஜமமும் தனுர் ராசியில் துத்தமாகிய ரிஷபமும் கும்ப ராசியில் கைக்கிளையாகிய காந்தாரமும் மீன ராசியில் உழையாகிய மத்திமமும் இடப ராசியில் இளியாகிய பஞ்சமும் கடகராசியில் விளரியாகிய தைவதமும் சிம்மராசியில் தாரமாகிய நிஷாதமும். அமைகிறபடியால் இதற்கு தற்காலத்தில் அரிகாம்போதி ராகம் ஆகிறபடியால், அவர் தாம் செங்கிலை மண்டிலத்தால் கற்கடகத்தை கோத்து அந்நிலையே ஆடற்சீராய்ந்துள்ளார்: முன்னைக் குரற் 'கொடி தன் கிளையைநோக்கி. பறப்புற்ற கோல்லைப்புனத்துக்குருந் தொசித்தால் பாடுது முல்லைத்தீம்பாணி என்றாள் அங்ஙனம் அவர்கள் செம்பாலை 'அரிகாம்போதி ஆரம்பித்த பின் குரற்கொடி தன்கிளையாகிய பின்னையை நோக்கி முல்லைத்தீம்பாணி என்னும் இசையைப் பாடென்று சொல்ல அங்ஙனம் ரிஷபம் வலுக்க ஸட்ஜமம் மந்தமாகி பஞ்சமம் அதற்கு சமமாகி வந்தது. முறையே ரிஷப ஸட்ஜமமாகி அதற்கு தைவதம் பஞ்சமமாகிய நட்பின்மேல் பாடத்தொடங்கினள் அவ்விதம தங்கள் முதலாவது செம்பாலையாகிய அரிகாம்போதி கர்த்தாவின் நிலம் மாறிவிடாது. ஸட்ஜம பஞ்சமம் க்ரம இணை, கிளை, நட்பு ஆராய்ந்து மாறிப்பாடி நாராயணனைக் கொண்டாடியிருக்கிறார்கள். அங்ஙனம் சதுஸ்ருதிரிஷபம் ஸட்ஜமமாகுங்கால். இடமுறை ஸட்ஜமம் கைசிகி நிஷாதமாயும்.

கைசிக நிஷாதம், சுத்ததைவதமாயும் சதுஸ்ருதிதைவதம் பஞ்சமமாயும், பஞ்சமம் சுத்தம் மத்திமமாயும், சுத்தமத்திமம். சாதாரண காந்தாரமாயும், சரிகமபதநி என்று இணையில் கிளை நட்புடன் பொருந்தி தற்காலம் நடபைரவி என்னும் கர்த்தாராகமாய் வழங்கி வருகிறது என்பது நன்கு விளங்குகிறது.

பாலை

பண்டைக்காலத் தமிழ் மக்கள் தாம் வாழ்ந்துவந்த நிலத்தை நான்கு பகுதிகளாக பிரித்து வழங்கினர். குறிஞ்சி, நெய்தல், முல்லை, மருதம் என்பனவாம். குறிஞ்சியாவது, மலையும் மலையைச் சார்ந்த இடமுமாம். நெய்தலாவது, கடலும் கடலைச்சார்ந்த இடமுமாம். முல்லையாவது, காடும் காட்டைச்சார்ந்த இடமுமாம். மருதமாவது, வயலும் வயலைச் சார்ந்த இடமுமாம். இது போன்றே தமிழ் மக்கள் ஒழுக்கங்களையும் ஏழு பகுதிகளாகப் பிரித்து வழங்கினர் அவை 1 குறிஞ்சி (2) முல்லை (4) கைக்கிளை (4) பாலை (5) மருதம் (6) நெய்தல் (7) பெருந்திணை எனப்படும்.

இவற்றுள் காதலராற்கூடிக் கலந்த இருவரது பிரிவு ஒழுக்கத்தினைக் குறிப்பதுதான் பாலை. பிரிந்தாரை ஊழ் கூட்டி வைக்கக் கூடுதல் குறிஞ்சி. பிரிதல் பாலை. பிரிந்த வழி ஆற்றியிருத்தல் முல்லை. ஆற்றாது இரங்குதல் நெய்தல். பிரிந்தது காரணமாக ஊடுதல் மருதம். காதல் வாழ்க்கையின் நிகழ்ச்சிகள் அனைத்தும் இவ்வைந்து பிரிவினுள் அடங்குமாறு காண்க. இவ்வைந்தினுக்கும் வேறுபட்ட நிகழ்ச்சிகள் யாதொன்றும் காதல் வாழ்க்கையில் இலவாதலும் கண்கூடு.

இவற்றையே அன்பின் ஐந்திணை எனப் பொருளிலக்கணங் கூறும். இவ்வைந்திணையுள் பாலைத்திணையும் ஒன்றாகும். பாலையாவது பிரிதல் என மேலே கூறப்பட்டது. பிரிவு குறும் பிரிவு. நெடும் பிரிவு, பெரும் பிரிவு என பல்வேறு வகைப்படினும் யாவும் பாலையின்பால் படுத்தல் தெளிவு. மனம் ஒன்றே தொழிற்படும் புலன்கள் வேறுபட்டால் ஐந்தாயினவாறுபோல பாலைத்திணை ஒன்றே அத்திணை காரணமாக நிகழும் நிகழ்ச்சி வேறுபாடுகளால் ஐந்திணை ஆயிற்றென்றால் அது தவறாகாது. பாலை நிகழ்ச்சி இன்றேல் கூடுதலும் ஊடுதலும், இருத்தலும். இரங்குதலும் நிகழுமாறில்லையன்றே. அகநானூற்றுச் செய்யுள்களில்* ஒன்றுவிட்டொன்று பாலைச் செய்யுளாக நிற்பது மேற்சொல்லிய கருத்துக்கு அரண் செய்வதாகும். இன்பத்திணை சிறக்கச் செய்வது பாலையேயாம்.

"ஊடுதல் காமத்திற்கின்பம் அதற்கின்பம் கூடி முயங்கப்பெறின்
"உணவிலும் உண்டதறவினிது" காமம் புணர்தலின் ஊடலினிது"
என்பர் திருவள்ளுவர். இன்பம் சிறக்க வேண்டுமேல், காமம் சிறக்க வேண்டும். காமம் சிறக்க வேண்டுமேல் புலவியோ ஊடலோ நிகழ்தல்வேண்டும். எனவே பிரிதல் நிகழா வழிக்காமஞ் சிறவாதாதல் அறிகின்றோம், "இல்லை தவறவர்க்காயினும் ஊடுதல் வல்லது அவரளிக்குமாறு" என்பர் திருவள்ளுவர். இதன் கருத்து 'ஊடுதற்குரிய தவறுபாடு யாதொன்றும் தலைவன் மாட்டில்லையேயாயினும் அஃது உடையான் போல கருதி கற்பனை செய்து கொண்டாவது ஊடுதல். அவனது தலையளியைத் தரவற்றுகின்றது என்பதாம்.

"இல்லையாயினும்" என்ற உம்மை எதிர் மறையாதலால் தவறுபாடுடையராதலே பெரும்பான்மை என அறிகின்றோம். ஆகவே காதலின்பம் சிறக்க வேண்டுமாயின் பிரிதல் நிகழ வேண்டும் என முடிகின்றது மேலும் கூறின் பாலையாவது காதலார் கலந்த இருவரது பிரிவு ஒழுக்கம் இவ்வொழுக்கம் ஏனைய ஒழுக்கங்களைவிடச் சிறந்தது என்று கூறுதல் மிகைபடக்குறிபதாகாது. காமஞ் சிறந்ததற்கு இவ்வொழுக்கமே இன்றியமையாத தொன்றாய் வேண்டப்படுவது.

ஒரு தலைவன் ஒரு தலைவியைக் கூடப்பெறும் காலத்தை மிக்க ஆர்வத்தோடு எதிர் நோக்குகின்றனர். பிரிந்து உறையும் காலத்து இருவர் உள்ளத்தும், எவ்வளவிற்கு ஆர்வம் பெருகுகின்றதோ அவ்வளவிற்கவ்வளவு அவர்கள் மீண்டும் மருவிய காலத்துப் பெரும் இன்பம் பெருகுகின்றது. துசர்வாராது ஆர்வத்தின் அளவே நுகரும் இன்பத்திற்கு அளவே நுகரும் இன்பத்திற்கு அளவாகும் என்ற கருத்து நிறைந்த எடுத்துக்காட்டு.

ஊடலில் தோற்றவர் வென்றார் அதுமன்றம் கூடலில் காணப்படும் என்பர் திருவள்ளுவர்.

இனி கூடி மகிழும் குறிஞ்சியும், ஊடி மகிழும் மருதமும் போலாது முல்லையும் நெய்தலும் தனித்து உறைவாராது நிகழ்ச்சிகளையே குறிப்பவையாயினும் பாலையைப் போன் சிறப்பு அவற்றுக்

கின்மையும் காணத்தக்கது. முல்லையின் உரிப்பொருள் இருத்தல் அதாவது தனித்து உறையும் தலைவி பிரிவுத் துன்பம் தோன்றாத வளாய். முல்லை நிலத்தின் இயற்கை நிகழ்ச்சி காட்சிகளைக் கண்டு மனம் அமைந்து இருத்தலாம். எனவே முன்னைய துன்ப நிலையும் வேட்கையும் தோன்றாமல் நினைவும் தொழிற்படாமல் இருத்தல் என்பது புலனாகின்றது.

நெய்தலின் உரிப்பொருள் இரங்கல் அதாவது தனிமை ஆற்றாத தலைவி கை கடந்த துன்பத்தினளாகி நெஞ்சழியப் பெற்று சொல்லத் தகாதனவும் சொல்லி ஆற்றுதலாம். எனவே நினைவும் உணர்வும் அழிந்து தனது நிலையும் மறந்து புலம்புதல் என்பது புலனாகின்றது. ஆகவே நினைவு அவிந்து கிடக்குமாறு செய்யும் முல்லையிலும் நினைவு அழிந்து புலம்புமாறு செய்யும். நெய்தலிலும் வரம்பிகவாமல நினைவைத்தொழிற்படுத்தி இன்ப நுகர்ச்சியை எடுத்துக்காட்டி வேட்கையைப் பெருக்கும் பாலை சிறந்ததென்பது நன்கு விளங்குகின்றதன்றோ!

"பொருள் இல்லார்க்கு இவ்வுலகமில்லை" என வள்ளுவர் வழங்குவதால், அப்பொருளைத் தருவது பாலையாதலால் காரணத்தைக் காரியமாக்கிப் பாலையின்றேல் இவ்வுலகம் இல்லை எனக் கருத இடந்தருகின்றது. அறமும், பொருளும் இன்பமும் என எண்ணும் வழியும இன்பமும், பொருளும் அறமும் என எண்ணும் வழியும் பொருள், இடை நிற்றலால் அப்பொருள் ஏனைய இரண்டிற்கும் ஒத்த இன்றியமையாமையுடைத்தென அறிகின்றோம். அவ்வழியே செல்வோமாயின் அறத்திற்கும் பாலை காரணமாகிறது. பொருளைத்தேடப் பிரிகின்றது பாலையாம்.

பண்டைக் காலத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிலை மேற்கொண்டிருந்தனர். சோம்பலுடையராய்ச் சேம்பித் திரிந்தாரிலர். அப்படியிருந்தார் என்று அறிவதற்குரிய சான்றுகளும் காணப்படா. இல்லறம் செய்வதில், அவர்கட்கு பேரூக்கம் சொல்லி அடங்காது. அது காரணமாக அவர்கள் நிலத்திலும் கலத்திலுஞ் சென்று பொருளைத் தேடி வந்தனர். அவர்கள் தொழிலை உயிராக மதித்து வந்தனர் பண்டைத் தமிழ் மக்கள்.

‘வினையே ஆடவர்க்குயிரே’ இங்ஙனம் முயற்சியுடையோராய் வாழ்ந்த தமிழ் மக்கள் தம் முன்னோர் தேடி வைத்த பொருளை பொருளாக மதிப்பதிலர். அஃதுடையானைச் செல்வம் உடையவரென்று நினைக்கலுமிலர். தாம் தேடிய பொருளைக் கொண்டே இல்லறம் நிகழ்த்துதல் வேண்டும். என்ற உயர்ந்த கொள்கையை உடையவராயிருந்தனர். அங்ஙனம் நடத்துதலே சிறப்பெனக் கருதினர்.

இது கருதியே வரைவிடை வைத்து பொருள் வயிற் பிரிவர். தான் தேடிய பொருள் இல்லாமையை இரத்தலினும் இழிவாகக் கருதினர்.

‘உள்ளது சிதைப்போர் உளரெனப்படார் இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு’

என்பதாம். இதுவன்றி தாம்தேடிய பொருள்களைப் பெற்றவர்களே ஈதலான் வரும் இன்பத்தையும் பிற இன்பத்தையும் அடைவதற்குரியவர்கள் என்று நினைத்து, வினைத்தவண்ணஞ் செய்பவர்கள் தமிழர்கள், முன்னோர் தேடிவைத்த பொருள் மட்டும் உடையார். இன்பங்களை அடைவதற்குரிய தகுதியில்லாதவர்களே யாவார்கள் என்பதும் அவர்கள் கருத்தாம். பண்டைத்தமிழ் நூல்களுள் ஏனைய பிரிவுகளை விட “பொருள் வயிற் பிரிதவே” மிகுதியாகக் கூறப்படுகின்றது. இது ஒன்றே பண்டைத்தமிழ் மக்கள் பொருள் ஈட்டுவதில் கொண்டுள்ள ஆவலைத் தெரிவிக்கப்போதிய சான்றாம்.

‘ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கில்லெனச் செய்வினை கைம்மிக எண்ணுதி’ என்று ஒரு தலைவன் பொருள் இல்லையேல் இழப்பன இவையென்று கூறினான். பொருள் ஈட்டுவதில் இத்தகைய பேரூக்கமுடைய தமிழர்கள், கொடையிலும் இத்தகையராகவே காணப்படுகின்றனர். இரப்போருக்குக் கொடுக்க முடியாத நாட்களும் கொடுப்போருக்கு இரப்போர் அகப்படாத நாட்களும் துன்பத்தைத் தரும் நாட்களாகவே கருதினர்.

தலைமகள் நலங்கருதி தலைமகன் பொருள் தேட பிரிதலில் தனக்கு விருப்பம் இல்லாதது போலவும், பிரிய நேரிட்டதற்கு வருந்துவான் போலவும், அதன் பொருட்டு வருந்தும் தலைவியை ஆற்றுவித்தல் பொருட்டு பாடுவது பாலை இசையாம். அந்த பாலை இசையானது தற்காலத்தில என்ன பெயரால் விளங்குகிறது என்பதை இனி விளக்குவோம். சிலப்பதிகாரத்தில், அடியார்க்கு நல்லார், அடியிற்கண்ட மேற்கோளினால் விளக்குவதைக் கவனிக்கவும்.

தாரத்துள் தோன்றுங்குரல்உழை உழையுள் தோன்றும்குரல் குரலினுள் தோன்றும்

இளியுள் தோன்றும் துத்தம் துத்தத்துள் தோன்றும் விளரி இதன் பொருள்:—

நிஷாதத்தில் மத்திமமும், மத்திமத்தில் ஸட்ஜமும், ஸட்ஜமத்தில் ஸட்ஜமும், பஞ்சமத்தில் ரிஷபமும், ரிஷபத்தில் தைவதமும், ஒன்றுக்கொன்று, நட்பு பெறுவதால் கேட்பதற்கு மிகவும், இனிமையை உண்டாக்குகிறது என்பது தற்கால இசை வாணர்களின் ஏகமனதான அபிப்பிராயம் இவற்றுள் குரல் குரலாயது ஸட்ஜமத்தை ஸட்ஜமமாக ஆரம்பிப்பது செம்பாலை அல்லது குறிஞ்சி அரி காம்போதி என்றுமுன்விளக்கியுள்ளோம் இப்போது உழையுள் தோன்றும்குரல் மத்திமத்தை,ஸட்ஜமமாகஆரம்பித்துப் பாடுபதுபாலை யாழ்அல்லது அரும்பாலை, செம்பாலை அல்லது குறிஞ்சி அல்லது கற் காலம் வழங்கும் ஹரிகாம்போதி) கர்த்தாராகம் மாறிவிடாது அப்படியே அமைத்து. மத்திமத்தை ஸட்ஜமமாக ஆரம்பித்தால் பஞ்சமம், சதுஸ்ருதி, ரிஷபமாகவும், தைவதம் அந்தர காந்தாரமாகவும் நிஷாதம், சுத்தமத்திமமாகவும் ஸட்ஜமம் பஞ்சமமாகவும் ரிஷபம், சதுஸ்ருதி தைவதமாகவும், அந்தர காந்தாரம், தாகலி நிஷாதமாகவும் வருகிறபடியால் அதற்கு தற்காலத்தில் தீர சங்கராபரணம் என வழங்கிவருகிறது. இந்த ராகத்தைதான் தலைவன் தலைவிக்கு ஏற்பட்டபிரிவினால் உண்டான வருத்தத்தை ஆற்றுவித்தல் பொருட்டு பாடினான் இதுதான் பாலை [இசை] என்னே தமிழரின் மாண்பு! காலத்திற்கேற்ற ராகம்! என்பதை தமிழர்கள் உய்த்துணர்க.

மருதம்

மருதம் என்பது மருதமாம் அந்நிலத்தில் சிறந்திருத்தல் பற்றி வந்த பெயரென்பாரும், அதனை மறுத்து ஊடலும் கூடலும் போகம் நுகர்தல் பற்றி வந்த பெயரென்பாரும் என இருதிறத் தாசிரியர். இனி மருதம் என்பதற்கு வயல் என்று பொருள் பிங் கலத்தில் காணப்படுதலின் அது பற்றி வந்த பெயரெனக்கூறின்... அஃதும் ஆராய்தற்குரியதேயாம். வயல்பற்றி வந்த பெயரெனவும் ஊடியும் கூடியும் போக நுகர்தல் பற்றி வந்த பெயரெனின் உரிப் பொருள் பற்றி வந்த பெயரெனவும் கொள்ளத்தகும்.

வயலும் வயல்சார்ந்த இடமும் மருத நிலம் எனப்படும். இந் நிலத்திற்குப் பெரும் பொழுது ஆறும் உரியன. விடியல் என்னுஞ் சிறுபொழுது ஒன்றே உரியது-என்பாரும் உளர். இந் நிலத்திற்குத் தெய்வம் இந்திரனாவான். இதனை ஊடலுங்கூடலுமாகிய காமச் சிறப்பு நிகழ்தற்கு மருத நிலத்திற்கு தெய்வமாக 'ஆடலும் பாட லும் ஊடலும் உணர்தலும்' உள்ளிட்ட இன்பவிளையாட்டு இனிது நுகரும் இமையோர்க்கும் இருநூற வெறிலிக்கும் இறைவனாகிய இந்திரனை ஆண்டையோர் விழவு செய்து அழைத்தலின் அவன் வெளிப்படுமென்றார். (தொல். சூ. 5. நச்சி.) என்பதனால் நன்கறியலாம். இந் நில மக்கள் உழவராவார்.

பிற கருப்பொருள்களைக் களவியலுரை, தொல்காப்பிய உரை, அகப்பொருள் விளக்கம் முதலியவற்றிற்காணலாம். இந்நிலத்து உரிப்பொருள் ஊடலும் ஊடல் நிமித்தமுமாம். பரத்தை வாயினால் வர்க்கு முரித்தே "நிலத்திரி பின்றஃதென்மனார் புலவர்" [தொல், பொரு. சூ 224 நச்சி] என்றுஞ் சூத்திர உரையும். மருதஞ்சான்ற மருதம் என்ற "சிறு பாணாற்றுப்படை [186] அடிக்கு எழுதப் பட்ட (உரை) ஊடியும் கூடியும் போக நுகருந் தன்மையமைந்த மருத நிலம் என்னும் உரையும் ஈண்டு நோக்கற்பாலன. ஊடல் என் பது தலைவனும் தலைவியும் வரைவு நிகழ்ந்த பின்னர் இல்லறம் நடத் தும் கற்புக்காலத்தே தலைவன் பரத்தையிற் பிரிதல் காரணமாகவும் தலைவன்பால் நிகழாததொன்றை நிகழ்ந்ததாகக் கற்பித்துக்கூறுதல் காரணமாகவும் தலைவிக்கு நிகழும் சிறுகலாமாகும்.

இவ்வூடலைத் தலைவர் பாணன் முதலிய வாயில்களானுந்தன் கூற்
றானுந்தீர்த்துத் தலைவியைக்கூடுவான். அவ்வமயம் உண்டாகும் இன்
பம் மிகச்சிறந்ததாகும் இதனை ஊடலில் தோற்றவர்வென்றார். அது
பன்னுங்கூடலில் காணப்படும் (என்பவர் வள்ளுவர் (1327) குறள்)
என்னுந்தலைவன் கூற்றாலறியலாம். இங்ஙனம் இன்பஞ் சிறத்தல்
பற்றி இவ்வூடலை ஊடல் நீங்கக்கூடிய தலைவனுந் தலைவியும் மீண்
டும் விரும்புவர் இதனை தலைவி இன்னும் ஊடுவாளாகயான் அவள்
பால் ஊட னீங்க வேண்டுவேனாக. இதற்கேற்ப இராக்காலம் நீடிப்ப
தாக "ஊடுகமன்னோ வொளியிழையாமிரப்ப நீடுகமன்னோ இரா"
திருவள் 1329 என்று வலைவன் கூறுவதாகவும் ஊடல் போல இன்
பந்தருவ தொருதேவ ருலகமுமுண்டோ.

"புலத்தலில் புத்தேணாடுண்டோ" திருவள் 1323 என்று தலைவி
ஊடலைப் பாராட்டி கூறுவதாகவும் வரும். திருக்குறள் பகுதிகளா
லுணரலாம். இவ்வூடல் காமத்திற்கின்றியமையாததொன்றென்பதும்
இஃதின்றேல் காமஞ்சிறவாதென்பதும் உப்பமைந்தற்றால் புலவி
குறள் 1302 ஊடியுபக்குங் காலுப்பின்றுங்காமம் நாலடி 391 என்
னும் ஆன்றோர் வாக்குகளான் நன்கு புலனாகும். குறுந்தொகையில்
வரும் "புலவியஃதெவனோவன் பிலங்கடையே" 93 எனபதினாலும்
அன்புள்ள வழிப்புலத்தில் பயன்படுமென்பதுபெறப்படுதல் காண்க.
இஃதிங்ஙனஞ் சிறத்தல்பற்றியே போக்கெல்லாம் பாலை புணர்த்தல்
நனுங்குறிஞ்சி ஆக்கஞ்சேரூடலணிமருதம் நோக்குங்கால் இல்
லிருத்தல் முல்லை இரங்கல் நறுநெய்தல் சோல் விரிந்த நூலின்
றேகை.

என்னும் பாடலுள் ஆக்கஞ்சேரூடல் என்று பாராட்டப்பட்டது.
இனிப்பல்லாற்றான் வேண்டித் தெளிவித்த வழியும் தலைவியின்
ஊடல் நீங்காவிடினும் களவின் கண் அல்ல குறிப்பிட்ட வழியுந் தலை
வனும் ஊடுதல் உண்டு. இதனை "உணர்ப்பு வரையிறப்பினுஞ் செ
யற்குறி பிழைப்பினுஞ் புலத்தலும் ஊடலங்கிழவோற்குரியதோல் சூ
156 என்னுந் தொல்காப்பிய சூத்திரத்தாலறிக. எனவே ஊடல்
பெரும்பான்மை கற்பிற்குஞ் சிறுபான்மைகளவிற்குந் தொகை
யில் காணப்படும் மருதநிலப்பூ கமழ்பூ மென்சினைக்காஞ்சி செவ்வீ

மருது தேமா தாமரை ஆர்பல் நெல் பொய்கை, யாறு, வயல், கெண்டை அயிரை கணைக்கோட்டு வாளை நீர்நாய் குருவி, இருகு மனைக்கோழி வெருகு முதலியவற்றால் கவினுற்று விளங்குகிறது.

அன்றியும் மருதத்திணைக்கு ஊடலும் ஊடல் நிமித்தமும் உரிப்பொருள் என்று முன்னே சொல்லிற்று. இவ்வூடல் வேண்டற்பாலதோ என்ற வினவிற்கு விடை இறுப்பார் போன்று ஆசிரியர் திருவள்ளுவர். ஊடலின் சிறப்பினைக் குறிப்பிடுகிறார்.

'ஊடலுணர்தல் புணர்தலிவை காமம் கூடியார் பெற்ற பயன்' இக் குறளுக்கு விசேட உரை கூறிய பரிமேலழகர். "ஆடவர்க்குப் பிரிவெரன்ப தொன்றுளதாதன் மேலும் அதுதான் பரத்தையர் மாட்டாதலும். அதனை அறிந்து மகளிர் ஊடல் நிற்றலுழி அவ் வூடலைத் தவறு செய்வர் தாமே தந்தவறின்மை கூறி நீக்கலும், பின்னுமவ் விருவரும் ஒத்தவன்பினராய்க் கூடலுமன்றே மூன் வரைச்செய்தினர் பெற்ற பயன்" என்றார். இதனால் ஊடலின் சிறப்பு பெறப்படுகின்றது "கூடலும் ஊடலுங் கோவற்களித்து" (சிலப் 5...109) என்ற வரிக்கு அடியார்க்கு நல்லார் உரை கூறும் போது ஊடலின் காரணத்தையும் கூறியுள்ளார். "பின்னர் ஊடலளித்ததாவது எண்ணில் காமமெரிப்பினு மேற்செலாப் பெண்மை யும் நாணும் அழி வந்து குறை யுள்ளது கூடுந் துணையு நீயிர் பிரி வாற்றி யிருந்தீர் அன்பிலீ ரேன் ஊடுவது (சிலப் 6—109) சங்கச் செய்யுள்களில் தலைவனுக்கும் தலைவிக்கும் உண்டாகும். ஊடலும் அதுபற்றி அவர் உரையாடுதலும் மிக்க நாகரீகப் பண்புடன் விளக் கப்பட்டுள்ளன. உதாரணமாக, பாத்தையினின்றும் வந்த தலைமகன் தலைமகளை நோக்கி "மாசில் கற்பின் புதல்வன் தாய" என்று கூற அதற்குத் தலைமகள் "எம் முதுமையினை எள்ளல் வேண்டா யாம் எம் முதுமைக்கு பொருந்துவேம். எமது இளமை கழிந்தது உம் பொய் மொழி எமக்கு எவ்வாறு இனிமையைப் பயக்கும்" (அகம் 6 என்று கூறினர் என்பதினின்று தலைவியின் உரையாடும் திறம்நன்கு விளங்குகிறது.

இதற்கு நேர் முரணாகத் தற்காலத்தில்நாடகங்களிலும் திரைப் படங்களிலும் (சினிமா) தலைவன் தலைவியாகிய இருவருக்கும் உண்

டாகும் பிணக்கத்தில் அவர்கள் நாகரிகமாற்றங்கள் கேட்போர் செவிக்கு வெறுப்பை உண்டாக்குகின்றன. சங்கச் செய்யுளில் நாம் காணும் ஊடல் சாலவும் நுணுக்கமுடையதாக விளங்குகின்றன. இது கருதியே திருவள்ளுவர் புலவி நுணுக்கம் என்ற அதிகாரம் வகுத்துள்ளார். சில சமயத்தில் தக்க காரணமின்றியும் புலத்தல் உண்டு.

தலைவன் தலைவியை நோக்கி "காதல் மிகுதியால் இப்பிறப்பில் யாம் ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியமாட்டோம்" என்று சொல்ல அதைக்கேட்ட தலைவி, தலைவன் "இம்மை" என்றுகூறியதால் அவர் தம்மை மறுமையில் பிரிவதாகக் கருதியுள்ளார் என நினைத்து கண்ணீர் உகுத்தாள்.

இம்மைப் பிறப்பிற் பிரியலமென்றேனாக் கண்ணிறை நீர் கொண்டனள். (திருவள்)(புலவிநுணு 5) மற்றுந்தலைவன் தலைவியை நோக்கி உன்னைப்பிரிந்திருந்த காலத்துயான் உன்னை நினைத்தேன் என்றான். அதைக்கேட்ட தலைவி தலைவன் 'நினைத்தேன்' என்றதனால் ஒரு காலத்து மறந்து பின்னர் நினைந்ததாகப் பொருள் கொண்டு தலைவனிடம் ஊடினாள்.

உள்ளினேனென்றேன் மற்றென் மறந்தீரென்றென்னைப்,
புல்லாள் புலத்தக்கனள் (குறள்புலவிநுணு. 6)

இம்மாதிரி ஊடல்கள் நிகழுங்காலையில் தலைவனோ, தலைவியோ யாழ்ப்பாணனோ ஊடல் நீங்கப்பாடிய இசை தான் மருதம். இசை.

அன்றியும் பண்டைக்காலத்தில் பொதுவாகத் தமிழர்கள் எல்லோரும் இசையில் வல்லவர்களாயிருந்தார்கள். சிறப்பாக உழவர் [வேளாளர்] களும் இசையில் வல்லவர்களாயிருந்தார்கள். மற்றவர்களைக் காட்டிலும் உழவர்கள்மிகவும் சீரும் சிறப்பும் உடைத்ததாயிருந்தார்கள். அன்னை பாரதத்தாயின் அருந்தவப்புதல்வர்கள் என்றால்அது சாலப்பொருத்தம் உடைத்தாம். காரணம் ஒரு பச்சிளங் குழந்தையானது உணவு முதலியவைகளை பெறுவதற்கு தன் தாயையே எதிர்பார்க்கின்றதல்லவா. அதுபோல் உழவர்களும் பூமிதேவியை எதிர்பார்ப்பதால் பாரத பூமிக்கும் அவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்றால் அது மிகையாகாது.

ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் சிறப்பாக உழவர்கள் தான் முதற்காரணமாயிருப்பவர்கள். மக்களுக்கு உணவு இன்றியமையாத ஒரு சாதனமானபடியால் அதை உற்பத்திசெய்பவர்கள் உழவர்கள் தான். நகரங்களில் வாழும் மிகுந்த நாகரீக முள்ளவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் மேதாவிகளெல்லா உழவர்களை எதிர்பார்ப்பவர்கள்தான். அவர்கள் உணவுப்பொருள்களை உற்பத்திசெய்யவில்லையானல் தெரியும் இவர்கள்நாகரீகம் என்னவாகும் என்பது சென்ற உலக மகாயுத்தம் நடந்திராவிட்டால் உழவர்களின்பெருமை நன்கு புலப்படாதன்றோ. இன்னும் அவர்களைத்தானே உலகம் எதிர் பார்க்கின்றது. எந்தநாட்டில் உழவர்கள் சீரும் சிறப்புமாக வாழ்வார்களோ அந்தநாடுதான் மற்ற நாடுகளைவிட சிறந்த நாடாகும். ''பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்'' என்ற ஔவையாரின் வாக்கியம் இங்கே சிந்திக்கற்பாலதாம். பசிப்பிணியால் வாடும் நாடு நாடல்ல என்பதை. (குறள். 731)

தள்ளா விளையுளுந் தக்காருந்தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வதுநாடு. (குறள். 734)

உறுபசியும் ஓவாப்பிணியும் செறு பகையும் சேராதியல்வது நாடு, என்றபடியால், பசியையாற்றுவதற்கு காரணமாயுள்ளவர்கள் உழவர்கள் அன்றோ. உழவர்களுக்குக் வரி விதிக்கும் நாடு நாம் எங்கணும் பார்த்ததுமில்லை கேட்டதுமில்லை. இந் நாட்டில்தான் இந்தப்புதுமையைப் பார்க்கிறோம். இங்ஙனமாயின் எங்ஙனம் இந் நாடு முன்னேற்றமடைய முடியும். கோழைப்படாத செல்வம் மேழிச்செல்வம் அல்லவா.

மேழிச்செல்வம் கோழைபடாது

உலகத்தில் வாழ்பவர்கள் யார் என்றால் அவர்கள் தான் உழவர்கள் (குறள் 1033) உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுது உண்டுபின் செல்பவர்கள் தான் அன்றியும் சோழன் முடிசூட்டு விழாவில் ஔவையார் ''வரப்புயர'' என்று வாழ்த்தினார்கள். காரணம் வரப்புயர நீர் உயரும்; நீர் உயர நெல் உயரும் நெல் உயர, குடிகள் உயரும்; [உழவர்] குடிகளுயர கோன் உயர்

வான், என்று இந்நாட்டில் தான் இன்றைக்கு விவசாய வரியைப் போட்டு பின்னடையச் செய்ததைப் பார்க்கிறோம். இத்துணைச் சிறப்புவாய்ந்த உழவர்கள் வயலில் உழுது அதனால் இளைப்புற்று இருக்கும் உழவர்கள் இளைப்புத்தீர அல்லது சிரமந்தீர பாடிய இசை தான் மருதம். இதற்குச் சான்று, மலைபடுகடாம்பாடிய பெருங்கவுசிகனார் [வு] [469-70] பாட்டில் எருது எறிகளமர்ஓசை யோடேல் யாழ் மருதம் பண்ணி அசையினிர் கழிமின் [இபொ] எருத்தை யடிக்கின்ற உழவரோசையோடே கூடும்படி நலயாழில் மருதத்தை வாசித்து இளைப்பாறிப் போவீர்கள் என்பதனாலும் மதுரைக் காஞ்சி பாடிய மாங்குடி மருதனார் [657-8] பாடிய பாட்டில் சீரினிது கொண்டு நரம்பினி தியக்கியாழோர் மருதம் பண்ண என்பதனால் நன்கு விளங்குகின்றதன்றோ, அத்துணை சிறப்புவாய்ந்த மருத இசை தற்காலத்தில் என்ன பெயரால் வழங்குகிறதென்பதை இனி விளக்குவாம்.

துலைநிலைக் குரலுந் [ஸ]
தனுநிலைத் துத்தமும் [ரி]
நிலைபெறுகும்பத்துநேர் கைக்கிளையும் [க]
மீனத்து உழையும் [ம]
விடைநிலத்து இளியும் [ப]
மானக்கடகத்து மன்னிய விளரியும் [த]
அரியிடைத்தாரமும் [நி]

ஆணைவுறக்கொளலே அடியார்க்கு நல்லார் [இபொ]
துலாத்தில், குரலாகிய, ஷட்ஜமும் தனுக்கில், துத்தமாகிய. ரிஷபமும் கும்பத்தில், கைக்கிளை. காந்தாரமும் மீனத்தில், உழையாகிய மத்திமமும் இடபத்தில், இளியாகிய: பஞ்சமமும் கடகத்தில், விளரியாகிய: தைவதமும் சிம்மத்தில், தாரமாகிய: நிஷாதமும் [என்பதாம்]

[சிறுபா. 229-30

இசை நூல் கூறுகின்ற முறைமையாலே செம்பாலை. (என்பதாம்)

1. குரல்குரலாகிற் செம்பாலை என்ப
2, துத்தங் குரலாகிற் படுமப்பாலை
3. கைக்கிளை குரலேற் செவ்வழிப்பாலை
4. உழை குரலாகில் அரும்பாலை யென்ப
5. இளி குரலாகிற் கோடிப்பாலை என்ப
6. விளரி குரலாகின் விளரிப்பாலை
7. தாரங் குரலேன் மேற்செம்பாலை

[என்னும் பிங்கலநிகண்டு]

[இ-ள்]

1. குரல் குரலாகில் அதாவது ஸட்ஜமம் ஸட்ஜமமாகில்.

{ அரிகாம்போதி
செம்பாலை
குறிஞ்சியாழ் }

2 துத்தங் குரலாகில் அதாவது ரிஷபம் ஸட்ஜமமானல்.
படுமப் பாலை
நெய்தல்யாழ்
நடபைரவி

3. கைக்கிளை குரலேற் செவ்வழிப்பாலை இதற்கு விளக்கஉரை பின்னர் தருவோம். 4. உழைகுரலாகில் அதாவது மத்திமம் ஸட்ஜமமாயில் அரும்பாலை, பாலையாழ், தீரசங்கராபரணம். 5. இளிகுரலாகில் அதாவது பஞ்சமம் ஸட்ஜமாகில் கோடிப்பாலை மருதயாழ் (இசை) அதாவது குறிஞ்சி, நெய்தல், பாலை, என்ற மூன்று விபாசங்களில் விளக்கியபடி [செம்பாலை] அரிகாம்போதி கர்த்தா ராகப்படி பஞ்சமத்தை ஸட்ஜமமாக வைத்துப் பாடுவது தான். மருத இசை இதை வரிசைப்படுத்துவோம். பஞ்சமம் ஸட்ஜமமாகவும் - தைவதம் 2. சதுஸ்ருதிரிஷபமாகவும், நிஷாதம் 3. சாதாரண காந்தாரமாகவும் ஸட்ஜமம் 4. சுத்தமத்திமமாகவும், ரிஷபம் 5. பஞ்சமமாகவும் காந்தாரம் 6. சதுஸ்ருதி தைவத்மாகவும் மத்திமம் 7. கைசிகிநிஷாத்மாகவு வருகிற படியால் இதற்கு தற்காலத்தில் கரஹரப்பிரியா என்று வழங்குகிறார்கள்.

செவ்வழி

'நாற்பெரும் பண்ணும் சாதி நான்கும். பாற்படுதிறனும் பண்ணெனப்படுமே' நாற்பெரும்பண்ணென்பது குறிஞ்சியாழ்நெய்தல்யாழ் பாலையாழ் மருதயாம் என்பனவாம். மேற்கூறிய பண்கள் நான்கையும் இதுவரை பார்த்திருக்கலாம். இனி எழுபெ ரும்பாலைப்பற்றிவிளக்கி எழுதுவாம். இந்த எழு பெ ரும்பாலை என்றதில் நாற்பெரும் பண்களும் அமைந்துள்ளன. அவைகள் தான் மேலே காட்டிய நாற்பெரும் பண்களாம். அதாவது ஸட்ஜம, மத்திம, ரிஷப, பஞ்சமம் 'குரலுழைத்துத்தம் இளி என நான்காம்' என ஸ்தானங்கள்நான்கையும் ஆதாரமாகக்கொண்டு வருவது நாற்பெரும் பண்களாம். இனி "கைக்கிளை விளரிதாரமேன மூன்றும்" காந்தாரம் தைவதம் நிஷாதம் என மூன்று ஸ்வாஸ்தானங்களை ஆதாரமாகக்கொண்டு வருவது முப்பாலையாம். அவைகளில் காந்தாரத்தை ஆதார ஸ்ருதியாகக் கொண்டு வருவதுதான் செவ்வழிப்பாலை. செவ்வழி என்பது செம்மையாகிய வழியென விரியும் செம்மை என்பது உண்மை வாய்மை. தலைமை, நடுநிலைமை, பெருமை,முறைமை ஒழுக்கம் என பலப் பொருளையுடையது. இவைகளில் செம்மை என்பது ஒரு தெய்வீக வழியாகும்.

யாரொருவர் செம்மையுள் இருப்பார்களோ அவர்களுக்கு ஆண்டவனின் திருவருள் நிச்சயமாய்க் கிடைக்கும் என்பதை அப்பர் (4. 76 2)

மெய்ம்மையாம் உழ்வை செய்து
விருப்பெனும் வித்தைவித்தி
பொய்ம்மையாம் களையைவாங்கி
பொறையெனும் நீரைப்பாய்ச்சி
தம்மையும் நோக்கிக்கண்டு
தகவு எனும் வேலியிட்டு
செம்மையுள் நிற்பாராகில்
சிவகதி விளையும் அன்றே

என்பதால் நன்கறியலாம். ஆகவே செவ்வழி என்பது ஒருதெய்வீக இசை என்பதை யுணர்ந்தோம். இந்த தெய்வீக இசையைத்தான் விண்ணவர்கள் மண்ணுலகிலுள்ள திருவீழி மிழலை என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் உள்ள கடவுளைப் பாடி வணங்கி வழிபட்டு திருவருளைப் பெற்றார்கள் என்பதை அப்பர் தேவாரம் (12-10) பாட்டு பாலையாழோடு செவ்வழி பண் கோள மாலை வானவர் வந்து வழி படும் ஆலையாரால் அந்தண ராகுதி வேலையார் தொழும் வீழி மிழலையே என்பதால் ஆண்டவனின் அருளைப் பெற விண்ணவர்கள் பாடிய இசையாம். மேலும் (புறநா. 149) காலைக் கைவழி மருங்கில் செவ் வழி பண்ணி என்பதையும் கவனிக்க. இந்த செவ் வழிப் பண்ணை (இசை) பொதுவாக எல்லோருமே பாடினார்கள் என்றாலும் சிறப்பாக பெண்மக்கள் தான் இந்த இசைக்கு உரியவர்கள் எப்படி என்றால் பொதுவாக ஆடல்களை ஆடவர்கள் ஆடினாலும் சிறப்பாகப் பெண்களுக்குத்தான் அது இன்றியமையாததான ஒரு சிறந்த கலை என்பது கண் கூடு அதே போல், இந்த இசையை பெண்மக்கள் பாடியும் ஆடியும் இருந்தார்கள் என்பதற்கு சான்று. அடியில் வருமாறு காண்க.

திருவையாற்றுத் தேவாரத்தில் ஞானசம்பந்தர் இதைச் சிறப் பித்துப் பாடியுள்ளார் அதாவது, "புலனைந்தும்" என்னும் பதிகத் தில் 6-வது பாட்டில்.

'காந்தாரமிசையமைத்துக் காரிகையார் பண்பாடக்
கவினார் வீதி தேந்தாமென்றரங்கேறி சேயிழையார்
நடம்பயிலுந் திருவையாறே'

என்பதாலும் மேலும் அஃறிணைப் பொருளாகிய வண்டுகளும் கூட இந்த செவ்வழி இசையைப்பாடியதாக திருவீழிமிழலை தேவா ரத்தில் சம்பந்தர் பாடியுள்ளார் அதாவது, "ஏரிசையும்" என்ற பக்கத்தில் 7-வது பாட்டில்.

'சேறுடு செங்கழுநீர்த்தாதாடி மதுவுண்டு சிவந்த வண்டு
வேறுயவுருவாகி செவ்வழி நற்பண்பாரம் மிழலியமே

என்பதாலறிக மேலே கூறிய படி உயர்திணை அஃறிணை என இரு திணைப் பாலாரும் அதாவது விண்ணவர்களும் பெண்ணவர்களும் வண்டுகளும் இந்த இசையைப்பாடும் பெருமை யுடையதாம். மேலும் இந்த தமிழிசையை தெய்வமேகேட்டு ஆதரித்ததோடல்லாமல் தமிழிசைப் புலவர்களுக்கு பொருள்களும் நிறையத் தந்தாரென்றால் இந்த தமிழிசையின் பெருமையை எங்ஙனம் எவ்வாற்றால எடுத்தியம்ப முடியும். இதற்குச்சான்று திருவீழிமிழலைத்தேவாரத்தில் சுந்தரர் வெகு அழகாகப்பாடியுள்ளதை அன்பர்கள் கவனிக்கவும் "இருந்து நீர் தமிழிசை கேட்குமிச்சையால் காசுநித்தம் நல்கினீர்" என்றால் எங்ஙனே தமிழிசையின் மாண்பு இத்துணைச்சிறப்பு வாய்ந்த தெய்வீக இசையாம் செவ்வழி. தற்காலத்தில் இது என்ன பெயரால் வழங்குகிறது என்பதை இனி விளக்குவாம். கைக்கிளை குரலேற் செவ்வழிப்பாலை என்பது பிங்கலம்) குரல் குரலாக நூனெறிமரபிற் பண்ணி என்பது சிறுபாணாற்றுப்படை (229-30 இ. பொ) இசை நூல் கூறுகின்ற முறைமையாலே செம்பாலையாக வாசித்து. (எம்) செம்பாலை என்பது அரிகாம்போதி ராகம் என்பதை நாற்பெரும் பண்கள் என்று எழுதிய வியாசகத்தில் விளக்கியுள்ளவ்விடத்தில் ஒரு ஐயவினா அதாவது [செம்பாலை] அரிகாம்போதி ராகத்தையே ஆதாரமாகவைத்து ஒவ்வொரு ராகத்தையும் சொல்லவேண்டியதின் அவசியம் என்ன என்ற வினாவிற்குப்பின் விடை தருவாம் பண்டைக்காலத்திய தமிழர்களின் மரபு இயற்கையாயுள்ள உதாரணங்களினால் விளக்கி காட்டுவதுவழக்கம்.

பண்டைத் தமிழிசைக்கருவிகளில் தலைசிறந்து விளங்கியது குழலும் யாழும். இவ்விரண்டு கருவிகளில் குழல் தான் இயற்கையான இசைக்கருவி. இக்கருவிக்கு ஏனைய கருவிகள்போன்று வேறு சாதனமின்றி இயங்குவது உதாரணமாக யாழை எடுத்துக்கொள்வோமானால் பத்தர் மாடகம், கோடு. திவவு, நரம்பு, தானக்கோல் முறுக்காணிகள் முதலிய இவைகளின் துணைகொண்டு இயங்குவது

குழல் அப்மாதிரியன்ற ஒரு மூங்கிலை எடுத்து துளை செல்துவிட்டால் இயற்கையாய் இசைக்கும் குணத்தையுடையது இக்கருத்து பற்றித்தான் குழலினிதுயாழினிது என்றார்திருவள்ளுவர். இதிலுள்ள துளைகளை, அடைத்து வாசிக்காமல் அதாவது [அரைச்சுரமாய்] எல்லா விரல்களையும் திறந்து இயற்கையாய் வாசிப்போமானல் மேற்கூறிய [செப்பாலை] அரிகாம்போதி ராகந்தான் பேசும்.

இந்த இயற்கை குணம் அன்றும் இன்றும் என்றும் மாறு இயல் புடையதன்றோ. அன்றியும் மனித சாரீரத்தில் இயற்கையாய்ப்பேசுவதும் இரண்டு ஸ்தாயிகள் தான்பேசும். அதாவது மந்தாஸ்தாயில் அரை ஸ்தாயியும், மத்தி ஸ்தாயி ஒன்றும் தாரஸ்தாயில் அரையும் ஆக இரண்டு ஸ்தாயிதான் உத்தம சாரீரத்தில் பேசும். தற்கால பாட்டுகளும் இந்தக்கணக்கை அனுசரித்து அமைந்துள்ளன. குழலிலும் இதேமாதிரி இரண்டு ஸ்தாயிதான் பேசும். மற்றகருவிகள் இம்மாதிரி அன்று. ஆதலால் இயற்கைக் கருவிகள் குழலில் இயற்கைராகப[செபபாலை] அரிகாம் போதி பேசுகிற படியால் அதையே ஆதாரமாகக் கொள்ளவேண்டிய அவசியம் ஏர்பட்டது என்பதாம். மேற்படி அரி காம்போதியின் காந்தாரத்தை ஸட்ஜமமாக அமைத்துப் பார்ப்போமானல்

மத்திமம் சுத்த ரிஷபமாகவும்
பஞ்சமம். சாதாரண காந்தாரமாகவும்
தைவதம். சுத்த மத்திமமாகவும்
நிஷாதம். பிரதி மத்திமமாகவும்
ஸட்ஜமம். சுத்த தைவதமாகவும்
ரிஷபம். கைசிகி நிஷாதமாகவும்

அமையும் இதை வரிசைப் படுத்திப் பார்ப்போமானல்

ஸட்ஜமம். சுத்த ரிஷபம். சாதாரணகாந்தாரம். சுத்த மத்திமம். பிரதி மத்திமம் சுத்தகைவதம். கைசிகி நிஷாதம் ஆகிறபடியால் இதற்கு தர்காலத்தில் சுத்ததோடி: என்று சொல்லலாம்.

அந்த ராகத்தில் மற்ற கர்த்தராகங்களுக்குப் பேசும்பஞ்சமம். இல்லாததாலும் சுத்தமத்திமமும் பிரதிமத்திமமும் ஒரே காலத்தில் சேர்ந்தாற்போல் பேசுகிறபடியாலும், தற்காலத்திலுள்ள புலவர்கள் பெரும்பாலும் இதைப்பாடும் வழக்கம் இல்லாமல் போய் விட்டது. பண்டைகாலத்தில்எல்லோரும் எளிதாய்பாடிய இசைஎன்று மேற்கூறிய சான்றுகளால் நன்குவிளங்குவதை கவனிக்கவும். ஆனால் இவ்வியாசம் எழுதிய சகோடயாழ் ஆசிரியர் மட்டும் தற்கால வழக்கத்தில் பாடுகிறார் என்பதையும் இதை யாழில் வாசித்து வருகிறார் என்பதையும் கவனிக்கவும்.

விளரிப்பாலை

விளரி குரலாகின் விளரிப்பாலை (பிங்கலம்) விளரி கைக்கிளை விதியுளிக்கேட்டுந் தளராதாகிய தன்மைத்தாகும். (சிலப்) அடியார்க்கு நல்லார். அதாவது விளரிஎன்பது தைவதம். கைக்கிளை என்பது காந்தாரம். காந்தாரத்தை ஆதார சுருதியாக வைத்துப் பாடுவது செவ்வழிப்பாலை. அதாவது (சுத்த தோடி) என்று செவ்வழிக் கட்டுரையில் விளக்கியுள்ளோம். மேலும் செவ்வழி என்பது தெய்வீக இசையென்றும், விண்ணவர்களும், பண்ணவர்களும் வண்டுகளும் சர்வ சாதாரணமாய் பண்டைக்காலத்தில் பாடி வந்தார்கள் என்று தக்க ஆதாரங்களுடன் விளக்கியுள்ளோம். அந்தரகாந்தாரத்திற்கு நட்புச்சுரமாய் பேசுவது தான் விளரி (தைவதம்) அதைப்பற்றி இப்போது ஆராய்வோம். சிலப்) கானல் வரியில் [பக். 29] விளரிப் பண்பண்ணினர் பாணர் (சிலப்) கானல் வரியில் (பக். 191) நுளையர் விளரி நொடி தருந்தீம்பாலை என்பதாம். தெய்வீக இசையாகிய காந்தாரத்திற்கு நட்புச்சுரமாய் விளரி (தைவதம்) வருவதால் இதுவும் தெய்வீக இசையென்றே சொல்லலாம். மேலும் இந்த விளரியானது இரக்கத்தைக்காட்டும் ஓர் இசை என்று கவிச்சக்கரவர்த்தி ஜெயங்கொண்டான் சொல்லியிருக்கிறார். வங்கியத்திற்கு (குழல்) மாசுணமும் (பாம்பும்) யாழுக்கு யானையும் இசையைக்கேட்டு உணர்வழிந்து இருக்கும். குழலில் புன்னாகவராளி ராகம் வாசிக்கும்போது, மகரவிளரி (சுத்த தைவதம்)க்குப் பதில் கும்ப விளரி. (சதுஸ்ருதி தைவதம்) பிடித்து வாசித்தால் ராகத்தைக் கேட்டுக்கொண்டு ஆடுகின்ற நாகப்பாம்பு உடனே வாசிப்பவனைக் கொத்திவிடும். இது கண்கூடு அனுபவம் என்னே தைவதத்தின் பெருமை மேலும் உடையாரா முன் இல்லார்போல்'' என்றபடி அண்டவனின் அருளைப் பெற இந்த ராகம் பெரிதும் பயனுடைத்தாம்.

எப்படியெனின் விளங்குவாம் பொருளுடையவனிடத்தில் அஃது இல்லாதவன் எப்படி இரக்கத்துடன் இரப்பானோ அது போல் அருளையுடைய ஆண்டவனிடத்தில் அஃதிலா மக்கள்

அருளையுடைய இன்றியமையாத ஒரு ராகம் விளரி என்றால் அது மிகச் சாலப் பொருத்தமுடைத்தாம். மேலும் திருவள்ளுவர் அருளைப் பற்றிச் சொல்லுவார்.

"பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார் அற்றார் மற்று ஆதல் அரிது" (குறள் 248) அருள் செல்வம் செல்வத்துள் செல்வம் (குறள் 241) அருள் இல்லார்க்கு அவ்வுலகமில்லை. (குறள் 247) என்று உறுதி கூறும் அருளையுடைய ஆண்டவனிடம் ஆன்மக்களாகிய நாம் அருளைப்பெற்று ஆனந்தமுறச் செய்வது இவ்விளரி இசையாம். இத்துணைச் சிறப்புவாய்ந்த விளரி இசை தற்காலத்தில் என்ன பெயரால் வழங்கிவருகிறது வன்பதை இனி விளக்குவாம். செம்பாலைப்படி (அரிகாய்போதி)

1. கைவதம்..................ஸட்ஜம மாகவும்.
2. நிஷாதம்..................சுத்தரிஷப ,,
3. ஸட்ஜமம்..................சாதாரணகாந்தார ,,
4. ரிஷபம்..................சுத்தமத்திம ,,
5. காந்தாரம்..................பஞ்சம ,,
6. மத்திமம்..................சுத்தகைவ ,,
7. பஞ்சமம்..................கைசிகிநிஷாத ,,

ஆகிறபடியால் இதற்கு தற்காலத்தில் அனுமத்தோடி, என்று வழங்குகிறார்கள்

3 மேற் செம்பாலை

தாரங்குரலேன் மேற்செம்பாலை (பிங்கலம்) (சிலப்) வேனிற் காதை 23 வரி (221 பக்) அதிரா மரபின் யாழ்கை வாங்கி மதுர மதுர கீதம் பாடினள் மயங்கி'' (மாதவி) இ. பொ அதிரா மரபு என்றது யாழ் கருதி கலையாது கையில் வாங்கி (எ-ம்) மதுர கீதம் பாடினாள் என்பது வாயினால் முதலில் பாடி பின்பு யாழொடு சேர்ந்து பாடினாள். மதுரகீதம் பாடி மயங்கினாள், என்பது தாரங் குரலான மேற் செம்பாலை என்னும் பண்ணை (இசை) கண்டத்தால் பாடி மயங்கி அப்பண்ணையே யாழிலும் பாடினாள் என்பதாம் பாலை யாழ், மத்திமத்தை ஆதாரமாக வைத்துப்பாடுவது இதற்கு தீர சங்கராபரண ராகமென்று பாலையாழில் விளக்கியுள்ளோம். அந்த மத்திமத்திற்கு நட்புச்சுரயாய் வருவது தாரம் (நிஷாதம்) இதை ஆதாரஸ்ருதியாக வைத்துப்பாடுவது தான் மேற்செம்பாலை தலைவன் தலைவியை விட்டுப்பிரிவது அதனால் தலைவி அவள் வாருத்தத்தை நீக்கப்படுவது (பாலை இசை) தீரசங்கராபரணம் என்று பாலையாழில் தக்க ஆதாரங்களுடன் விளங்கியுள்ளோம்.

இங்கு மாதவி கோவலனை விட்டுப்பிரிந்து பிரிவாற்றாது மயங்கி பாடிய இசையே மேற்செம்பாலையாம். இந்த இசை தற்காலத்தில் என்ன பெயரால் வழங்கிவருகிறது. என்பதை இனி விளங்குவோம் செம்பாலைப்படி (அரிகாம்போதி)

1. நிஷாதம்................ ஸட்ஜமமாகவும்
2. சட்சஜமம்...... சதுஸ்ம்ருதிரிஷப ,,
3. ரிஷபம் ......அந்தரகாந்தார ,,
4. காந்தாரம் ......*பிரதிமத்திம ,,
5. மத்திமம்...... பஞ்சம ,,
6. பஞ்சமம் ...... சதுஸ்மிருதிதைவதம் ,,
7. *தைவதம்......காகலிநிஷாத ,,

ஆகிறபடியால் இதற்கு தற்காலத்தில் மேசகல்யாணி ராகம் என்று வழங்க வருகிறார்கள். இதற்கும் தீர சங்கராபரணத்திற்கும் மத்திமம் ஒருசுரத்தான்வித்தியாசம் இவ்விரண்டு ராகங்களுக்கும்உள்ள

தொடர்பும் சமயசந்தர்ப்பத்திற்கேற்ற பொருத்தமும் உற்றுநோக்காகவும் தலைவிக்கு பிரிவாற்றாமையினால் ஏற்பட்ட வருத்தத்தை தலைவனே வந்து (பாலை இசை) தீர சங்கராபரணத்தைப்பாடி வருத்தத்தை நீக்கியது.

மேற்செம்பாலையானது (மேசகல்யாணி) பிரிந்த தலைவனை மறுபடியும் சேராமல் இல் வாழ்க்கையில் வெறுப்புற்று கவுந்தியடிகளின் உபதேசத்தால் துறவியானது. ஆதலால் இல்லறப்பற்றுஎன் உலகப்பற்றையே துறந்து எல்லாம் வல்ல இறைவன் திருவடியை அடைவதற்கு உரிய ராகம் இம்மேச கல்யாணியாம். (குற350) பற்றுக பற்றான் பற்றினை அப்பற்றை பற்றுக பற்றுவிடற்கு என்ற வள்ளுவர் வாக்கின் படி இப்பற்றையும் எப்பற்றையும் நீக்கி பற்றான் பற்றினைப் பற்ற இம்மேற் செம்பாலை (மேச கல்யாணி) இசையைப் பாடி முக்தியின்பம் பெறுவோமாக.

நலம் மிக்க நலம்.